# உதயன்

20 JUN 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 ஆனி 7 ஞாயிற்றுக்கிழமை (21 06 1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:175


## ஒலுமடுப் பகுதியில் மோட்டார் தாக்குதல்

வவுனியா. ஜூன் 21

ஒலுமடுப் பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது நேற்று புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர் எனவும்—

தொடர்ந்து படையினரும் பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர் எனவும்— பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மோதல் சம்பவங்களும், கடும் சினைப்பர் தாக்குதல்களும் இடம்பெற்றதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## அமைச்சர் ராஜபக்ஷவின் பாதுகாவலர் இருவர் பலி!

### அமைச்சர் தப்பினார்

கொழும்பு, ஜூன் 21

கொழும்பு — இரத்தினபுரி வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் அமைச்சர் மஹிந்தராஜபக்ஷவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் பலியானார்கள்.

எகலியகொட என்னுமிடத்தில் எதிரே வந்த போக்குவரத்துச் சபை பஸ்ஸுடன் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வாகனம் மோதியது.

அமைச்சருக்குப் பாதுகாப்பாக முன்னால் சென்ற வாகனம் தான் விபத்தில் சிக்கியது.

மேலும் 3 பாதுகாப்புஉத்தியோகத்தர்கள் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7-9-21)

# கப்பல் சேவையை நடத்தக் கோரி திருமலையில் உண்ணாவிரதம்!

## ஏமாற்றப்பட்டுவிட்டதாக பயணிகள் பிரதேச செயலருக்கு மகஜர்

திருகோணமலை, ஜூன் 21

திருமலை - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவையை உடன் ஆரம்பிக்குமாறு கோரி திருமலை கண்ணாடித் தொழிற்சாலையில் தங்கியுள்ள பயணிகள் இன்று காலை 7 மணி முதல் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொள்ள உள்ளனர்.

இந்த அடையாள உண்ணாவிரதம் குறித்து நேற்றைய தினம் மேற்படி பயணிகளால் திருமலை (பட்டணமும் சூழலும்) பிரதேச செயலருக்கு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.

இம்மகஜரில் ''அடுத்த கப்பலில் யாழ்ப்பாணம் அனுப்புவதாக எம்மை மன்னாரில் இருந்து அழைத்து வந்தவர்கள் அனைவரும் இன்று ஏமாற்றி விட்டனர்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். வருவதற்காக திருமலை கண்ணாடித் தொழிற்சாலையில் ஆயிரம் பயணிகளும், மன்னாரில் 8 ஆயிரம் பயணிகளும், வவுனியாவில் 2 ஆயிரம் பயணிகளும் தங்கி உள்ளனர்.

இவ்வாறு பல்வேறு இடர்கள் மத்தியிலும் தங்கியுள்ள அகதிகளையும் மற்றும் பய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்தினபுரியில் மற்றொரு மின்மாற்றி தகர்ப்பு!

இரத்தினபுரி நகரில் உள்ள மற்றொரு மின் மாற்றி நேற்று அதிகாலை 4 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

ஒரு மாத காலத்தில் இரத்தினபுரி நகரப் பகுதியில் இடம்பெற்ற இரண்டாவது மின் மாற்றி தகர்ப்புச் சம்பவம் இதுவாகும்.

நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் மின் மாற்றி பலத்த சேதமடைந்ததுடன் இரத்தினபுரி நகருக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலிகொம் கோபுரம் ஏறாவூரில் சேதம்!

மட்டக்களப்பு, ஜூன் 21

ஏறாவூரில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதல்களின் போது ஸ்ரீலங்கா ரெலிகொம் பரிவர்த்தனை நிலையத்தின் கோபுரம் சேதமடைந்தது.

1-15 மணி முதல் 1-45 மணி வரை இத்தாக்குதல் இடம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சாகும்வரை உண்ணாவிரதத்தை கைவிட தமிழ் கைதிகள் நிபந்தனை

## தமிழ்க் கட்சித் தலைவரின் உத்தரவாதம் கோருகின்றனர்

கொழும்பு, ஜூன் 21

''தமிழ்க் கட்சி ஒன்றின் தலைவரோ அல்லது பொறுப்பு வாய்ந்த ஒருவரோ எமது கோரிக்கையை நிறைவேற்றி வைப்பதாக உறுதியளித்தால் நாம் நடத்த உள்ள சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடத் தயாராக உள்ளோம்.''

இவ்வாறு எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் ''விசாரணை செய். அல்லது விடுதலை செய்'' என்ற கோரிக்கையை முன்வைத்து சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பதாக அறிவித்திருந்த களுத்துறைச் சிறையிலுள்ள தமிழ்க் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

களுத்துறைச் சிறையிலுள்ள கைதிகளை மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் நேற்று சந்தித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

''நீண்டகாலமாக எந்த விதமான விசாரணைகளு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று தமிழ்க்கட்சிகள் அமைப்புக்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூன் 21

எதிர்வரும் 26 ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமிகோயில் முன்றலில் புளொட் அமைப்பினர் நடத்தவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு மூன்று தமிழ்க்கட்சிகள், வெகுஜன தொழிற்சங்க அமைப்புக்கள் உட்பட பல அமைப்புக்கள் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன

களுத்துறைச் சிறையிலுள்ள கைதிகள் மேற்கொள்ள உள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும்—

யாழ்.மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளைத் தீவிரப் படுத்தக் கோரியும்—

கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சிப்பகுதியில் 25 பொது

(10ஆம் பக்கம் பார்க்க)

### தணிக்கை

யுத்தச்செய்திகளுக்கான தடை உத்தரவு காரணமாக பிரசுரத்துக்கு முன் அனுமதி பெறாத இராணுவச் செய்திகள் தவிர்க்கப்பட்டுள்ளன. (ஆ-ர்)

## 3 ஊர்காவலர் உயிரிழப்பு

அம்பாறை மாவட்டம் சோளாவடி என்னும் இடத்தில் உள்ள ஊர்காவற் படையினரின் சோதனைச் சாவடி ஒன்று நேற்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

இத்தாக்குதலில் மூன்று ஊர்காவல் படையினர் உயிரிழந்ததாகவும், ஒருவர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது. (இ-7)

## சுயேச்சைகுழுவைச்சேர்ந்த இருவர் கடத்தப்பட்டனர்!

### யாழ். நகரில் நேற்று சம்பவம்

யாழ்பபாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியில் நேற்று இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த இருவர் மற்றொரு அரசியல் கட்சியினரால் தாக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செல்வம், பொன்ராஜ் எனப்படும் இந்த இருவரும் ஐந்து சந்தியில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்ற சமயம் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாகவும்—

ஜனநாயகம் பற்றிப்பேசுவோர் இத்தகைய அடாவடிச் செயல்களில் ஈடுபடுவது கவலை தருவதாகவும்-யாழ் மாவட்ட சுயேச்சைக் குழு எம்பியான ஆர். ராமேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக படையினரிடம் தாம் முறையிட்டிருப்பதாகவும் அவர் கூறினார். (இ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்!

எமது ஆலயத்தின் ஸ்தாபகர்

**சிவக்கன்று மருதப்பு சுவாமி**

அவர்களின் அன்புக்கும் ஆசிக்கும் பாத்திரமாகி 1948 ஆம் ஆண்டு ஆலய முதல் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற எம் ஆலய பரிபாலன சபையின் மூத்த முதல் பொருளாளராய் பல ஆண்டுகள் பணியாற்றியதுடன் இயற்கை எய்தும் வரை காப்பாளராயும், பிரதம ஆலோசகராயும் இருந்து ஆன்மீகப் பணியில்

எம் மக்களை வழிநடத்திய

## அமரர் சு. குமாரசுவாமி

அவர்கள் கனடாவில் இயற்கை எய்தியமையை அறிந்து தீவக மக்களாகிய நாம் ஆழ்ந்த வேதனை அடைகிறோம். அன்னாரின் ஆன்மா இறை நிழலில் இளைப்பாற, சாந்தியடைய தீவக மக்கள் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன தர்மகர்த்தா சபை,

**ஈழத்து இராமேஸ்வரம்,**
**பாணாவிடை சிவன் கோயில்.**

புங்குடுதீவு. (57035)

---

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



அமரர்

## குமாரசாமி யோகேந்திரன்

(இரட்டையர் குழு- பபி)

மலர்வு: **05-12-1940**  உதிர்வு: **25-05-1998**

எமது குடும்பத் தலைவன் அமரர் க. குமாரசாமி யோகேந்திரன் அவர்களின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றியோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் பலவிதமான உதவிகளைச் செய்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் 24-6-98 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மகன், மருமகள்.

பரிஷ் M. P. C. S. முன்பாக
பொன்னாலை வீதி,
மானிப்பாய். (சி/4078)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி

உதயம் 14 — 05 — 1942



மறைவு 22 — 05 — 1998

## கந்தையா சிதம்பரநாதர்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

உன்னையே உருக்கி வாட்டி
உதிரத்தை உணவாயூட்டி
பாசமும் பரிவும் காட்டி பாரில்
எம் வாழ்வினுக்கு
ஒளியூட்டி நாதன்
கழலிணைந்த எம் தந்தையே
போற்றி! போற்றி !!

கைதடி மேற்கு, — குடும்பத்தினர்
கைதடி. ( 57025 )

---

# விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

உரும்பராய்ப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோட்டார்சைக்கிள் -சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

சைக்கிளில் சென்றவரான உரும்பராய் மடத்தடியைச் சேர்ந்த எட்மன்ட்யோசப் (வயது 36) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)

---


A/L 99 Chemistry
' ORGANIC '
Mr. அன்பழகன்
ஆரம்பம்: 24/6 Wed 5 p m.

A/L 2000 புதிய பிரிவு
புள்ளிவிபரவியல்
Mr. தவசேகர்
SHAMROCK
(சி/4079)



நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
21- 06 - 98 ஞாயிறு முதல்
அர்ஜுன்-ரம்பா-மீனா
நடித்த
செங்கோட்டை
C. D. வெளியீடு)
காட்சிகள்:- 10-30, 2-30
(57021)



ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
2 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
பாட்ஷா
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)



லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
சினிமா ரசிகர்களின் பெரும் வரவேற்புடன் காட்சியளிக்கின்றது
கல்யாணப் பரிசு
எதிர்காலத்தில் எந்த ஒரு தியேட்டரிலும் இவ்வாறான ஒரு காட்சியைப் பார்க்க முடியாது என்பதனை நினைவூட்டுகின்றோம்.
காணத்தவறாதீர்கள்!
காதல் மன்னன்
ஜெமினிகணேசன்
சரோஜாதேவி
தங்கவேலு நடித்த
கல்யாணப் பரிசு
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56999)


---

# தவறிவிட்டது

சிறியபேர்ஸுடன் பெறுமதிமிக்க பொருளும், விசேட அடையாள அட்டையும் யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து-

இல. 22,
கைலாச பிள்ளையார் வீதி,
நல்லூர்

என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(57033)

---


உ
வட்டுக்கோட்டை
கண்ணகைஅம்மன்கோயில்
மகா கும்பாபிஷேகம்

22-06-1998 திங்கட்கிழமை காலை 11-50மணி முதல் 2-00 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும்.
மாலை 4.00 மணி முதல்

திருக்கலியாணம்
விசேட மேளக்கச்சேரி

1. V. K. கானமூர்த்தி குழுவினர்
2. N. R. K. இரத்தினகுமார் குழுவினர்
3. R. சிவகுமார் குழுவினர்
4. S. தில்லைநாதன் V. ஜெகநாதன்

ஆலய பரிபாலன சபை
தொண்டர் சபை

மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை. (சி/4075)


---

# மரண அறிவித்தல்கள்

## மயிலு இராமச்சந்திரன்

கொடிகாமம் கஜமுகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் மயிலு இராமச்சந்திரன் 20-06-1998 அன்று அகால மரணமானார்.

இவர் மயிலு — வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும், மயிலு சின்னத்துரை (இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், கொடிகாமம்), மயிலு சின்னராசா (கோகிலா கோப்பி பார், கொடிகாமம்), மயிலு செல்வராசா (பங்காளர், கஜமுகன் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22-06-98) திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் பருத்தித்துறை வீதி, குடமியன் வரணி இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
ம. சின்னத்துரை, ம. சின்னராசா,
ம. செல்வராசா
(சகோதரர்கள்)

(57034)

---

திருமதி

## தங்கேஸ்வரி செல்லத்துரை

வட்டுக்கோட்டை கிழக்கைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கை வதிவிடமாகவும் கொண்டு தற்போது கொழும்பில் வசித்தவருமான திருமதி தங்கேஸ்வரி செல்லத்துரை 18-06-98 இல் கொழும்பில் காலமானார்.

இவர் தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா செல்லத்துரை (யாழ். தேவி அரிசி ஆலை உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், வட்டு. கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகமுத்து, பாறுவதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சிவகாமன் தம்பதிகளின் அன்புமருமகளும், நித்தியகல்யாணி(லண்டன்), லோகநாயகி(லண்டன்), யசோதா (கொழும்பு), முருகதாஸ் (ஜேர்மனி), ஜெயநேசன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr. ஜெயபாலன் (லண்டன்), கணக்காளர் சண்முகநாதன் (லண்டன்), ஸ்ரீகுமார் (கொழும்பு), தவளம் (ஜேர்மனி), திருமகள் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21-06-98) கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்;
நா. செல்வராசா,
(தம்பி)

நொத்தாரிஸ் லேன்,
வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை. (57010)

---

## நாகலிங்கம் அன்னம்மா

கொக்குவில் மேற்கு, சிவகுருலேனைச் சேர்ந்த நாகலிங்கம் அன்னம்மா 19-6-1998 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், கனகம்மா, செல்லத்துரை மற்றும் நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருமநாயகி, செந்தில் செல்வம் (சுவிஸ்), உதயகுமாரி (வசந்தி, சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிதம்பரநாதன் (காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்), பாலலட்சுமி, பிறேமசுதன் (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், தாட்சாயினி (மீரா, சுவிஸ்), பவதாரினி (மதுரா), புரந்தகி, கோகுலன், துவாரகி, கோகிலா, லஜிதா, கோபிநாத், பிரன்னாத் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 20-6-1998 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சிதம்பரநாதன்
(மருமகன்)

(55438)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரை வெறுத்து நின்று
# வில்லை கீழே போட்ட பார்த்திபனை
# மனம் மாறச் செய்த பார்த்தசாரதி

பாண்டு புத்திரர்களில் ஒருவனான அர்ச்சுனனுக்குக் காரணப் பெயர்கள் பத்து உண்டு. அவற்றில் ஒன்று பார்த்தன் என்பது. பாரதப் போரின் போது பார்த்தனுக்குத் தேரோட்டிய காரணத்தால், கண்ணபிரான் பார்த்த சாரதி என்று பெயர் பெற்றார்.

காலத்தால் தூண்டப்பட்ட பாரதப் போரில் பதினெட்டு அக்ரோணி சேனைகள் பதினெட்டு நாள்களில் அழிந்தன. பாண்டு புத்திரர் ஐவர், கண்ணன், சாத்தகி, அஸ்வத்தாமா, கிருபாச்சாரியார், கிருதவர்மா ஆகிய பத்துப் பேர் மட்டுமே உயிர் பிளைத்தனர்.

அந்தக் கொடிய யுத்தத்தில் பல ஆயிரக் கணக்கான தேரோட்டிகள் பங்குகொண்டனர். அனைவரும் காலதேவனிடம் சிக்கி மரணமடைந்தனர். ஆனால் பார்த்த சாரதியின் பெயரும் புகழும் பூவுலகு உள்ள வரை நிலைத்திருக்கும் நிலையை எய்திவிட்ட காரணம் என்ன? ஒன்று அவதார மகிமை, அடுத்தது கீதோப தேசம்.

பூமி தேவியின் பாரம் தீர்க்க கிருஷ்ணனாக அவதாரம் செய்த நாராயண மூர்த்தி தனது குறிக்கோளையே குறியாக வைத்துத் துட்டர்களை அழித்துச் சிட்டர்களைக் காப்பாற்றினார் என்பது தான் பாரத மகா காவியத்தின் அந்தரங்கம் என்று பேசப்படுகிறது. அப்படியாயின் இறுதியில் உயிர் பிழைத்த பத்துப் பேர் மட்டும் தானா சிட்டர்கள்? இது சிந்தனையைக் கிளறிவிடும் ஒரு வினா.

அர்ச்சுனன் மகாவீரன். வில்லுக்கு விஜயன் என்று புகழ் பெற்றவன், இளமைக் காலத்தில் எத்தனையோ வீரதீரச் செயல்கள் புரிந்தவன். அன்பு, சத்தியம், கடமை, உதாரகுணம், குரு பக்தி போன்ற உயர்ந்த குணங்களுக்கு உறைவிடமாக விளங்கியவன்.

### அவதார இரகசியம்

பாரதப் போரின் போது

## தர்ம யுத்தம் அதன் விளைவானது

கிருஷ்ணன் மட்டுமே பாண்டவர் பக்கம் நின்றால் போதும் என்று கண்ணனை வேண்டி வரம் பெற்ற மதியாளன் அவன். கிருஷ்ணன் ஓர் அவதார புருஷன் என்ற இரகசியம் அறிந்தவர்களில் அர்ச்சுனனும் ஒருவன்.

ஏனையோர் கிருஷ்ணனை யாதவ குலத்தில் பிறந்து துவாரகையை ஆட்சி செய்த அரசனாகவே கருதினர்; கண்டனர். அவதார இரகசியம் அறியாத துரியோதனனிடம் கிருஷ்ணன் "துரியோதனா உனக்கு நான் வேண்டுமா? அல்லது எனது படைகள் வேண்டுமா" என்று கேட்டபோது — "உமது படைகளைத் தந்தால் போதும், நான் போரில் வெற்றி பெற்று விடுவேன்" என்று கூறினான் அந்த மதியீனன்.

போர் தொடங்கு முன் இருபக்கச் சேனைகளும் அணி வகுத்து நின்றன. துரோணர், பீஷ்மர், அஸ்வத்தாமா, கர்ணன் போன்றவர்கள் படைகளுடன் ஒரு புறமும், தர்மர் முதலான பாண்டவர்களும் படைகளும் எதிர்ப்புறத்திலும் நின்றனர்.

அந்தத் தருணம் கண்ணன் எதிர்பார்த்த நிகழ்ச்சி நடந்து விடுகிறது. வீரனான அர்ச்சுனன் காண்டீபத்தையும் தூளியையும் தேர்த்தட்டில் வைத்து விட்டுத் தேரிலிருந்து குதித்து, எதிரணியினரை நோக்கித் தயக்கத்துடன் நடக்கிறான். அவனைத் தொடர்ந்து தர்மரும் தம்பியரும் பின் செல்லுகின்றனர்.

"ஹோ ... ஹோ ... துரியோதனனின் படைகளையும் அணி வகுப்பையும் கண்ட பாண்டவர்கள் பயந்து விட்டனர். இதோ அவனிடம் சரணடைய வருகின்றனர். இனிப்போர் இல்லை" என்று கௌரவப் படைகள் ஆரவாரம் செய்தன.

கடிவாளத்தை இடது கையிலும் சவுக்கை வலது கையிலும் ஏந்திய கண்ணன் புன்னகை புரிந்தபடி தேரில் இருக்கிறான். "நடக்கப் போவது எனக்குத் தெரியும்' என்ற நம்பிக்கையும், குறும்புப் பார்வையும் அவனுடைய கண்களில் பிரதிபலிக்கின்றன.

### அவர்களுக்குக் கவலை

நிராயுதபாணியாக நடந்து வந்த அர்சுனனைக் கண்ட துரோணரும் பீஷ்மரும் ஆச்சரியம் அடைந்தனர். அர்ச்சுனன் சரணடைந்தால் போர் நின்றுவிடும். பாண்டவர் இராச்சிய உரிமையை இழந்து விடுவர், அதர்மம் வென்றுவிடும் என்று கவலை கொண்டனர்.

தயக்கத்துடன் நடந்து சென்ற அர்ச்சுனன் தனக்கு வில் வேதம் போதித்த துரோணாச்சாரியர் முன்பு மண்டியிட்டு வணங்கி 'சுவாமி அரச நெறிப்படி போர்புரிய அனுமதி கொடுத்தருள்புரியுங்கள்' என்று வேண்டினான். "அர்ச்சுனா எழுந்திரு, உனது கையில் காண்டீபம் இருக்கும் வரை உன்னை வெல்ல யாராலும் முடியாது. தர்மம் வெற்றி பெறும். உறுதியுடன் போர் செய்" என்று அனுமதி கொடுத்தார் துரோணர்.

அடுத்துப் பாட்டனார் பீஷ்மரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். "குழந்தாய் இந்தப் போரில் தர்மம் வெற்றி பெறுவது உறுதி. உங்களுக்கு எல்லா நலன்களும் உண்டாகட்டும்" என்று வாழ்த்தினார்.

ஆசி பெற்றுத் திரும்பிய அர்ச்சுனன் தேரில் ஏறிக் காண்டீபத்தை எடுத்து நாணோசை செய்தான். போர்ப் பறை முழங்கியது. போர் தொடங்கப் போகிறது என்று அனைவரும் எதிர்பார்த்திருந்த அந்த வேளையில்—

அர்ச்சுனன் எதிரணியில் நிற்கின்ற பாட்டன், ஆசிரியர் மாதுலர்கள், சகோதரர்கள், மைந்தர்கள், மைந்தர்களின் மைந்தர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரைக் கண்டு மனம் நொந்து துயரத்துடன் கூறுகிறான்.

### வில்லை எறிந்த விஜயன்

"கண்ணா போர் புரிய விருப்பங் கொண்டு இதோ என் எதிரில் வந்திருக்கின்ற எனது உறவினர்களைக் கண்டு எனது அங்கங்கள் அயர்ச்சியடைகின்றன. உடல் எரிகிறது, என் மனம் குழலுகிறது, உறவினர்களைக் கொன்று அதனால் வரும் நன்மையை என் மனம் நாடவில்லை. வெற்றியையும், சுகத்தையும் நான் விரும்பவில்லை."


"பரந்தாமா, இங்கு எனக்குப் பகைவரே இல்லை. இவர் என் பாட்டனார், இதோ இவர் என் குருநாதர், அதோ அவர்கள் எனது பெரிய தந்தையின் புதல்வர்கள். இவர்கள் என்னைக் கொல்ல விரும்பினாலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**மூளாய் அருணாசலம்**

ஒளிக்காந்தி
உதயன் ஞாயிறு சிறப்பகம்

## காந்தியின் கடவுள்



என்னைப் பொறுத்த மட்டில் கடவுள் என்பதும், சத்தியம், அன்பு என்பதும் ஒன்றே. கடவுளே ஆசாரம். கடவுளே நன்னெறி. கடவுளே சீலம். கடவுளே அச்சம் இன்மை. ஒளியைத் தருபவனும், உயிருக்கு மூலமும் கடவுளே.

இவையெல்லாம் உண்மையாயினும் இவை மட்டுமே கடவுள் அல்ல. இவற்றிற்கு அப்பால் நிற்பவன் ஆண்டவன். நாஸ்திகனுடைய நாஸ்திகமும் அவனே. அவனுடைய எல்லையற்ற காருண்யமே நாஸ்திகனையும் 'இரு' என்று அனுமதி தருகிறது. அவன் நம் உள்ளங்களை சோதித்து உள்ளதை உள்ளபடி அறிகிறான். வாக்கும் மனமும் தாண்டி அப்பால் நிற்கிறான். அதாவது அவன் தன்மையைக் கருத்தில் கொள்வதும் சொல்லால் விளக்குவதும் முடியாத காரியம்.

நம்மை நாம் அறிவதில்லை. நம் உள்ளங்கள் நமக்குப் பூரணமாகத் தெரிவதில்லை. அவன்தான் நம் உள்ளங்களை அறிவான். நம்மைப் பற்றி நாம் சொல்வதை அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். நம்மைப் பற்றியும், நம் எண்ணங்களைப் பற்றியும் பேசும் பொழுது நாம் உண்மை பேசுவதில்லை. உண்மையை மாற்றிச் சொல்லுகிறோம். அவனோ உண்மையைக் கண்டு கொள்கிறான்.

ஆண்டவன் கல்யாண குணங்கள் கொண்ட புருஷோத்தமன் ஆவான். அத்தகைய கடவுளை வேண்டுவோருக்கு அதை வேண்டாத ஞானிகளுக்கு அவ்யக்தப் பொருளாக நிற்பான். கையால் தொட்டு வழிபட வேண்டும் என்று ஆசைப்படும் மக்களுக்கு அழகிய மூர்த்தியும் ஆவான். ஞானிகளுக்குச் சுத்த ஸ்தவமாக அருவமாய் நிற்பான். அவரவர்களது வழிபாட்டு அவசியத்தின்படி மூர்த்தியாகவோ, அருவமாகவோ விளங்குவான். அவரவருடைய அறிவின்படி ரூபமும், அரூபமும் கொள்வான். நம் உள்ளத்தில் நமக்குள் கோயில் இருக்கிறான். நமக்கு அப்பாலும், வெளியிலும் இருக்கிறான்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தனது சமநிலையைக் குழப்பினால்
# இயற்கை எமக்குப் பாடம் புகட்டும்

அன்று போல் இன்று இல்லையே என்று எம்மில் பலர் ஏங்குவதை, குறிப்பாக முதியவர்கள் கூறுவதை நாம் கேட்கிறோம். இதில் உண்மை இல்லாமல் இல்லை.

அன்று பருகிய நீரின் சுவை இன்று பருகும் நீரில் இல்லை. இன்று நன்னீர் என்ற பெயரில் வன்னீரை பருகின்றோம். நல்ல காற்றை சுவாசிக்க முடியவில்லை. தூசி மூக்கை அடைக்கிறது. வேலை செய்யாமலே மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குகின்றது. வரவர கோடை காலத்தில் வெப்பம் தாங்க முடியவில்லை.

...னங்களின் புகை மண்டலமும் எரிபொருளின் நாற்றமும் மூச்சை திணறடிக்கிறது. சுற்றாடலில் கழிவுகளின் நாற்றம்; இரைச்சல், இவற்றுக்கு மத்தியில் எமது வாழ்க்கை பழக்கப்பட்டுவிட்டது. இவை எல்லாம் என்ன? விஞ்ஞானத்தாலும், தொழில் நுட்பத்தாலும் பொருளாதார அபிவிருத்தியாலும், மேலை நாட்டு நாகரிக மோகத்தாலும் நாம் அடைந்த பயன்கள்தான் இவை.

### அபிவிருத்தி என்று அலையும் மனிதனே, கவனம்!

பகுதி — 1

**மூ. கந்தசாமி**

விரிவுரையாளர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

நாம் எம்மைப் பற்றி சிந்தித்தோமே தவிர நாம் வாழும் சுற்றாடல் பற்றி சிந்திக்கத் தவறிவிட்டோம். சூழல் மாசுறுதல் பற்றியோ, அல்லது பாதுகாப்புப் பற்றியோ நாம் அக்கறை கொள்ளாமல் இருந்தமையாலேயே மேலே கூறப்பட்ட பிரச்சினைகளையும், வேறுபிரச்சினைகளையும் நாம் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இப்படியே போனால் காலத்துக்குக்காலம் மேலும் மேலும்சுற்றாடல்பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டிய நிலைவரும். வெள்ளம் வர முன் அணை கட்டுவது போல் சூழல் மாசடையமுன் சூழலை பாதுகாக்க வேண்டும்.

### மாற்றங்கள்

சூரிய சக்தியைக் கொண்டு உணவு தயாரிக்கும் இயல்பு தாவரங்களுக்கு மட்டுமே உண்டு. இதனால் நாமும் விலங்குகளும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாவரங்களை நம்பியுள்ளோம். தாவரங்களை விலங்குகள் உண்ண, விலங்குகளை நாம் உண்ண என உணவுச் சங்கிலியினூடாக உணவுப் பொருள்கள்

**மனிதனும் இயற்கையும்**

உணவுகள் சுவையின்றி நீர்த் தன்மையாக இருக்கின்றன. முதல் நாள் பூச்சி நாசனி விசிறிய மரக்கறி வகைகள், பழங்களை மறுநாள் உண்ணுகின்றோம், உண்ணும் பொருள்களில் நஞ்சுத்தன்மை இருக்கலாம் என்ற பயப்பீதியுடன் உணவை உண்ண வேண்டியுள்ளது. வீதிகளில், வாக...

கடத்தப்படும் போது அவை பல்வேறு விதமான மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. முடிவில் ஆரம்ப நிலைத்லுள்ள பொருளாகவே சடயீ

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

யாழ். கச்சேரிச் சூழலில் கண்டி வீதியில் இருந்து 100 யார் தொலைவில் கூண்டுக்குளி பேரின்பநாயகம் ஒழுங்கையில் நான்கு பரப்புக் காணியில் ஊர்திச்சாலை உட்பட சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி சந்திரா தர்மரட்ணம், 21/1, றக்கா வீதி, கூண்டுக்குளி, யாழ்ப்பாணம். (56937)

சண்டிலிப்பாய்ச் சந்தியில் 8¾ பரப்பு வெறும் காணியும், ஐயனார் கோயிலடி பிரதான வீதியில் 6½ பரப்பு வீட்டுடன் காணியும் மற்றும் திருநெல்வேலியில் வீட்டுத் தளபாடங்கள் Freezere Fridges தையல் மெசின்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 106, பலாலி வீதி, திருநெல்வேலி. (தபாற்பெட்டிச் சந்தியடி.) [56989]

வீட்டுத் தளபாடங்கள், மற்றும் பாவனைப் பொருள்கள் பின்வரும் முகவரியில் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் மாலை 4 — 6 மணி வரை. ஐ. செல்லையா, இல. 1048, கே.கே. எஸ். வீதி, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம். [57008]

திருவாசகம் (658 பாடல்கள்) சிவயோகசுவாமிகள் அருளிய நற்சிந்தனைப் புத்தகங்கள் இருக்கின்றன. தொடர்பு: நாவலர் கலாசார மண்டபத்திற்கு அருகில் 372, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [56978]

G.J L, JVC, ST 25 மொடல் டெக் வகைகள் (யப்பான்) வீடியோ கசற் (ஒறியினல் யப்பான்) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. செந்தூரன், இல. 4, மேதர் லேன், மானிப்பாய். [57009]

நஷனல் டெக் G7EN, G10 EN, G12EN, NV300EN மற்றும் நஷனல் கலர் ரீ. வி. — T. C. 491 TR விற்பனைக்குண்டு. தொடர்பு: S. சிவரஞ்சன், C/O PC. சுப்பிரமணியம், உதய சூரியன் வீதி, உடுவில் சுன்னாகம். [57016]

### உடன் விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி (Singer) மின்விசிறி (KDK), Typewriter English, தையல் மெசின் விற்பனைக்குண்டு. ஞாயிறும், திங்கள் காலையும் தொடர்பு கொள்ளவும். இல. 561, கஸ்தூரியார் வீதி, (கஸ்தூரியார் வீதி முடிவு) யாழ்ப்பாணம். [56988]

### மணமகன் தேவை

இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த கணிதபாட ஆசிரியை அவிட்டம் 1 ஆம் பாதம், வயது 34 உடைய மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பு: புஸ்பா திருமண சேவை, 559, K. K. S, வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம். [57013]

### இலகு திருமண சேவை

உள்ளூர்வெளியூர் Engineers B.Sc, புள்ளிவிவர உத்தியோகத்தர், T.O சைவம், Bankers, கணக்காளர் இவர்கட்கு மணப்பெண்கள் தேவை. தொடர்பு: ஞாயிறு தினங்களில் துரைவிமலா, 958/8, கே. கே. எஸ். வீதி, யாழ். நாச்சிமார்கோயிலடி. [56986]

### காணவில்லை

பிறவுண் நிற ஆண் பொமனேரியன் நாயை 16-06-98 முதல் காணவில்லை. இதைக் கண்டால் கொக்குவில் 86/6, சம்பியன்லேனிலுள்ள க. விஜயரட்ணம் என்பவருக்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். (57004)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும் தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில்.) [56965]

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [56972]

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல-101, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி அருகில், கந்தர்மடம் யாழ்ப்பாணம். (வாடிக்கையாளர்களுக்கு சந்தை விலையிலும் குறைத்துக் கொடுக்கப்படும்) (57003)

### பெற்றுககொள்ளவு ம

தவறவிடப்பட்டு கட்டுகள் அவிழ்ந்து வந்த கறவைப்பசு ஒன்று எமது வீட்டில் கட்டி வைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் வீ. பாலசிங்கம், பாலாவோடை, இணுவில் எனும் முகவரியில் ஆதாரங் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (57005)


## வில்லைக் கீழே...

(மூன்றாம் பக்கத் தொடர்)
நான் இவர்களைக் கொல்ல மாட்டேன். இத்தனை பேர்களையும் கொன்று, உலகை ஆள்வது எனக்கு உவகையைத் தருமா? ஆகவே நான் இந்தப் போரைச் செய்யேன்'' என்று சொல்லி வில்லையும், அம்பையும் கீழே எறிந்து விட்டு மனவுருக்கத்துடன் இருந்தான்.

அர்ச்சுனனின் அவல நிலையைக் கண்ட பரந்தாமன் ''தனஞ்சயா சந்தேகம் உள்ளவனுக்கு இகம் பரம் இரண்டும் இல்லை. ஞானத்தால் சந்தேகங்களை அறுத்தவனைக் கர்மங்கள் கட்டுப் படுத்தா. அறியாமையால் எழுந்த உனது ஐயங்களை ஞானவாளால் துனித்துக் கர்மங்களைச் செய். எழுந்திரு. என்னைப்பார்'' என்றார்.

''தேவா, எண்ணிறந்த கைகள் முகங்கள், கண்கள், கூடிய பெரிய வடிவில் உயிர்த் தொகுதிகள் அனைத்தையும் பிரமனையும் எல்லா முனிவர்களையும், தேவ சர்ப்பங்களையும், ஏனைய பிறவற்றையும் காண்கின்றேன். முடிவும் முதலும் எல்லாம் நீரே என்பதை அறிந்தேன்.

''திருராஷ்டர புத்திரர்கள், வீஷ்மர், துரோணர், பதினெட்டு அக்ரோணி சேனைகள் ஆகியன, நதிகள் கடலை நோக்கிச் செல்வது போல, அக்கினி வீசும் உமது வாய்க்குள்புகுகின்றன. பயங்கர வடிவம் உள்ளதேவரீர் யார்?'' என்று அதிசயத்துடன் வினவினான் விஜயன்.

''குந்தி புத்திரா, உலகங்களை அழிக்கவல்ல காலம் நான். உலகங்களை ஒடுக்குவதற்குத் தலைப்பட்டிருக்கிறேன். இங்கு இருக்கின்ற வீரர்கள் எல்லோரும் வாழமாட்டார்கள். இவர்கள் ஏற்கனவே என்னால் கொல்லப் பட்டிருக்கிறார்கள். செத்த பாம்பை அடிப்பது போன்றதே உனது கர்மம். எழுந்திரு. போர் செய். பகைவரை வென்று செல்வம் நிறைந்த அரச பதவியை அனுபவிப்பாயாக. புகழைப்பெறு. காரணன் நான். கருவி நீ. கலக்கம் தெளிந்தனையா'' என்றுவினவினார்விஸ்வரூபர்.

அர்ச்சுனன் ''ஐயனே உமக்குக் கோடி வணக்கம் புரிகிறேன். தந்தை தாய் குரு எல்லாம் நீரே. உமக்கு ஒப்பாரும் உயர்ந்தவரும்இல்லை என்னை மன்னித்தருளும் கருணை கொண்டுமுன்னைய வடிவைக் காட்டும்'' — என்றான்.

''அர்ச்சுன! இந்த விஸ்வரூபத்தை உன்னைத் தவிர முன்புயாரும்கண்டதில்லை'' என்று கூறிய அச்சுதன், கண்ணபிரானாகக் காட்சியளித்து அர்ச்சுனனின் நடுக்கத்தையும், பயத்தையும் அகற்றித் தேற்றினார். விஜயன் காண்டீபத்தை வளைத்து நாண் ஒலி செய்து போருக்கு ஆயத்தமானான்.

★


**புலமைப் பரிசில் 1998**

33 ஆவது பரீட்சையில் அதி கூடிய புள்ளிகள் பெற்றோர்:

1. அ. ஜனனி (யா. ஜ. ச. வி. அ.)
2. க. பூர்ணிமா (யா. ச. மா. ம. வி.)
3. உ. உமையாள்
4. கா. முகிலன் (யா. உ. ம. க.)
5. அ. கஜானி (யா. இ. ம. ஆ. பா)
6. த. பாலரூபன் (யா. கொ. இ. க.)
7. கே. கம்ஷினி
8. யோ. பத்மயோகன்
9. து. ஜயந்தன்
10. சி. கஸ்தூரி (யா. ஆ. மெ. மி. பா)
11. சு. ஜனகன் (யா. ந. தெ. ஶ்ரீ. வி)
12. பா. அகிலநாத் (உடு. சை. த. வி.)

புலமைப் பரிசில் பரீட்சை

21—06—1998

BOND

யாழ். நகர்

(56973)

**ஆங்கிலம் தபால் மூலம்**

தொழில் புரிவோர், தேடுவோர், மாணவர் அனைவருக்கும் விரைவாகவும், விளக்கமாகவும் பயிற்றப்படுகிறது. முத்திரை, சுய விலாசமிட்ட உறையுடன் எழுதவும்,

**LAMPS LTD,**

76, Mahaveethiya,
(grand street)
Negombo.

(56504)

**ஸ்ரீ முருகன் T.P. நிலையம்**

நீர்வேலி தெற்கு
(கந்தசாமி கோயில் வடக்கு வீதி)

போட்டோ கொப்பி பிரதிகள் உடனுக்குடன் செய்து கொள்ளலாம். தொகையான பிரதிகளுக்கு விசேட கழிவுண்டு. எம்மிடம் தொலைபேசி வகைகள் மற்றும் இணைப்பு வயர்கள், இணைப்பர்கள் விற்பனைக்கு உண்டு.

(56889)


## தனது சமநிலையை....

(மூன்றாம் பக்கத் தொடர்)
துவ நிலையில் சூழலில் சேருகின்றது. இவ்வாறு சடத்துவப் பொருள்கள் சுற்றிசூழற்சியாக செல்லும்போது காபன் வட்டம், நைதரசன் வட்டம், ஒட்சிசன் வட்டம், நீர் வட்டம், கனிப்பொருள் வட்டம் என பொருள்களின் வட்டம் ஏற்படுகிறது.

இயற்கை சூழலில் வாழும் உயிரினங்களும் சடத்துவ சூழலும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. இயற்கை சூழலுடன் தொடர்ச்சியாக பல்வேறு பொருள்கள் சிறியளவில் அல்லது பெரியளவில் ஒன்று சேருகின்றன; அல்லது வெளியேற்றப்படுகின்றன. மாசுப் பொருள்களின் கட்டமைப்புகள் சூழலில் இருக்கும் போது இரசாயன, உயிரியல் தாக்கங்கள் மூலம் சூழலில் சேருகின்றன. சூழலுடன் மாசுப் பொருள்கள் சேரும் போது பொருள்களின் இயற்கை வட்டங்கள் பாதிப்படைந்து சுற்றாடலுக்கும், மனிதனுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும் நிலையிலேயே சூழல் மாசடைகிறது. சூழலில் மாசுப் பொருள்களின பௌதிக, இரசாயன மாற்றமானது சுற்றாடலை மட்டுமன்றி மனித உடல் நலத்திற்கு— சுவாசம், தோல், உணவு என்பவற்றினால் மாசுப் பொருள்களை உள்ளெடுத்து பாதிப்பை ஏற்படுத்தும்..

### மாற்றத்தால் தரம்குறைவு

சூழலிலுள்ள பொருள்கள் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ மாற்றம் ஏற்பட்டு அதனால் அப்பொருளின் தரம் குறையுமாயின் அது சூழல் மாசடைடதல் என கொள்ளப்படுகிறது. சூழலிலுள்ள மண், நீர், காற்று போன்றவற்றுடன் வேறு பொருள்கள் சேர்வதனால் அவற்றின் தரத்தில் மாற்றம் ஏற்பட்டு பயன் குறைந்து செல்வதை மாசடைதல் எனக் கொள்ளலாம்.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் நிலம், நீர், காற்று என்பன இயல்பான நிலையிலிருந்து மாறுபாடு அடைகின்றது. உதாரணமாக நீர் மாசடையும் முறையைப் பார்ப்போம்.

★ நன்னீருடன் உப்புநீர் கலத்தல்

★ நீருடன் தொழிற்சாலை கழிவுகள் கலத்தல்

★ நீருடன் மனிதக் கழிவுகள் கலத்தல்

★ நீருடன் இரசாயனப் பொருள்கள் கலத்தல்.

★ நீருடன்நோய்க் கிருமிகள் கலத்தல்.

இப்படியே பட்டியல் இட்டால் அவை நீண்டு செல்வதை அவதானிக்கலாம். எனவே சூழலுக்கு ஒவ்வாத பொருள்கள் காரணமாக சூழலில் உயிர்வாழ தகுதியற்ற நிலைக்கு சூழல் மாசுறுதலுக்கு தள்ளிவிடும். சூழல் மாசுறுதல் விலங்குகளினாலோ அல்லது தாவரங்களினாலோ ஏற்படுவதில்லை மனிதர்களாலேயே சூழலில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகிறது.

சடப் பொருள்களுக்கும், ாவரங்களுக்குமிடையில் த சம நிலையுண்டு. இவ்வாறு சடப் பொருள்களுக்கும் விலங்குகளுக்குமிடையில சமநிலையுண்டு. இந்த சம நிலைகளில் எந்த ஓர் இடத்திலும் சமநிலை குழப்பப்படுமாயின் அங்கு அழிவு உண்டாகும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பழைய கலாசாரங்களும், நாகரிகங்களும் முற்றாக அழிந்து போனமைக்கு சூழல் சமநிலை குழப்பமே காரணமாகும். உதாரணமாக சிந்துவெளி நாகரிகம், எகிப்திய பிரமிட்டு நாகரிகம், மாயா நாகரிகம் போன்ற புகழ் பெற்ற நாகரிகங்கள் அழிந்தமைக்கு சூழல் சரியான முறையில் பாதுகாக்கப்படாமையே காரணமெனக் கண்டறியப்பட்டுள்ளது. இயற்கை எப்பொழுதும் சம நிலையை பேண விரும்புகின்றது. இச் சமநிலையை குழப்புபவர்கள் மனிதர்களே.

### மக்கள் தொகை அதிகரிப்பு

மக்கள் தொகையின் அசுர வேக வளர்ச்சியானது சமூக பொருளாதார சுற்றாடல் விடயங்களில் பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது. மக்கள் தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப உணவு உற்பத்திக்காகவும், எரிபொருள் தேவைகளுக்கும் ஏனைய தேவைகளுக்குமாக காடுகள் அழிக்கப்பட்டன. சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப நீர் வளங்களும், நிலவளங்களும் அளவிற்கு அதிகமாக பயன்படுத்தப்படும் போது இயற்கை சமநிலை குழப்பப் பட்டு சுற்றாடல் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப விவசாய கைத்தொழில் உற்பத்திகள் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இக் கால கட்டத்தில் விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் வேகமாக வளர்ந்துள்ளன. விஞ்ஞானம், தொழில்நுட்பத்தின் பயனாக விவசாய, கைத்தொழில் துறைகள் அபிவிருத்தியடைந்ததுடன் நகர அபிவிருத்தியும் வேகமாக வளர்ந்தது.

தொழில் நுட்பத்தின் பெருவெற்றியும் பொருளாதார அபிவிருத்திகளும் அதனால் ஏற்பட்ட நன்மைகளும் சேர்ந்து மனிதர்களையும், சுற்றாடலையும் பிரித்துவிட்டன. இதனால் சுற்றாடல் மாசுறுவது கவனிக்கப்படவில்லை. இன்று சூழல் நம்மை சிந்திக்க வைத்துள்ளது. இயற்கை எப்பொழுதும் சம நிலையை பேண முயலும். முடியாதவிடத்து, எமக்கு பாடம் புகட்டி விடும்.

எங்கெல்லாம் அபிவிருத்தி நடவடிக்கைகள் அதிகரிக்கின்றனவோ அங்கெல்லாம் சூழல் பாதுகாப்பு குறைந்து செல்லும். ஆயினும் அபிவிருத்திக்கு சூழல் பாதுகாப்பு எதிரான காரணியில்லை. சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அபிவிருத்தியே நிலையான அபிவிருத்தியாகும். அபிவிருத்தியும் சூழல்பாதுகாப்பும்இணைந்து திட்டமிடப்பட வேண்டும்.

(வளரும்)


**தொண்டர் ஆசிரியர்களின் கலந்துரையாடல்**

21 - 06 - 98 இன்று காலை 11-00 மணியளவில் யா/கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இலங்கை வித்தியாலய அதிபர் சங்கத் தலைமையில் தொண்டர் ஆசிரியர்களின் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. முன்னைய தீர்மானப்படி 25 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியை சந்திப்பதற்கான ஒழுங்கு செய்யப்படவுள்ளதால் தவறாது சமுகம் தருமாறு வேண்டுகின்றேன். சில முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளன.

க. சோமசுந்தரம்
இலங்கை வித்தியாலய அதிபர் சங்கத் தலைவர்

(சி/4073)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் ...நூலகம்


தரமான புளொக் தயாரிப்பதற்கு
நாடவேண்டிய இடம்

அருண்
புளொக் தயாரிப்பாளர்



அத்துடன்
குறைந்த கட்டணத்தில்
தரமான முறையில்
O போட்டோ பிரதிகள்
O அடையாள அட்டை
கவரிடுதல் (LAMINATION)

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## வைத்தியம்

சாதாரண- தீவிர உயர் ரத்த அழுத்தம், தலைச் சுற்று, நித்திரைக் குறைவு, உற்சாகமின்மை, பதற்றம், நரம்புப் பலவீனம் போன்ற ரத்த அழுத்தக் கோளாறுகளுக்கு காந்த மற்றும் இயற்கை மருத்துவ முறை மூலம் சிகிச்சை பெறலாம்.

மங்களபதி ஆயுர்வேத வைத்தியசாலை

41/5, அரசவீதி, (OFF- சங்கிலியன் வீதி), நல்லூர்.

3/13, பின்வத்த றோட், தெஹிவளை, T. P. 717842.

(56987)



JAFFNA COLLEGE

175th Anniversary Celebration Programme

| | | |
|---|---|---|
| 22 nd June: Monday | 9. 00 a. m. to 2. 00 p. m. | Exhibition. |
| | 2. 30 p. m. to 5. 30 p. m. | அரிச்சந்திர மயான காண்டம். |
| 23 rd June: Tuesday | 9. 00 a. m. to 2. 00 p. m. | Exhibition. |
| | 2. 30 p. m. to 5. 30 p. m. | காத்தவராயன் (சிந்துநடைக் கூத்து. |
| 24 th June: Wednesday | 9. 00 a. m. to 2. 00 p. m. | Exhibition. |
| | 2. 30 p. m. to 5. 30 p. m. | பொப் இசை. |
| 25 th June: Thursday | 3. 00 p. m. to | Bunker Memorial Lecture at |

Jaffna College Undregraduate Dept.
Hospital Road, Jaffna.

TOPIC: Agenda for the 21ST Century "Health Perspectives"

BY:
Dr. C. NATCHINARKINIYAN

Chairman: Dr. D. AMBALAVANAR.

| | | |
|---|---|---|
| 26 th June: Friday | 9. 00 a. m. | Praise Service at Cathedral Church, Vaddukoddai. |
| | 10. 15 a. m. | Opening of the Primary School Building. |
| | 10. 30 a. m. | Tree Planting Caremony. |
| | 11. 00 a. m. | Public Meeting Ottley Hall, |

Distribution of Thirukurral to all students and staff.
By the Colombo Alumni Association
Award of Gold Medals to Jubilarians by the Colombo Alumni Association.
Distribution of Sports Prizes.

| | | |
|---|---|---|
| | 1. 30 p. m. | Alumni Lunch. |
| 27 th June: Saturday | 10. 00 a. m. | Prize Giving and founder's Day Celebrations. |

Chief Guest: prof. John Walter Bicknell
and
Dr. Miss. C. V. Selliah

Parents, Alumni and Friends are Cordially Invited.

G. RAJANAYAGAM.
Prinsipal

(C/4066)



UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

## VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons up to 17 th July, 1998 for the under mentioned posts.

Department of Physical Education

1. Po$t of Temporary Lecturer/Asst. Lecturer in Physical Education.
2. Post of Visiting Lecturer in
   a) Pbysical Education theory.
   b) Physical Education Management.
   c) Methods of Training in Sports.
   d) Sports Psychology.
   e) Physical Educational Sociology.
3 Post of Visiting Instructors in
   a) Athletics.
   b) Gymnastics and Marching.
   c) Soccer.
   d) Netball.
   e) Table Tennis
4. Post of Temporary Instructor /Instructress in Physical Education Grade III.
5. Post of Instructor/Instructress in Physical Education Grade III.

POSTS SALARY SCALES

(a) Temporary Lecturer
RS. 9, 350 p. m. (fixed)
(b) Temporary Asst. Lecturer
RS. 8, 075 p. m. (fixed)
(c) Visiting Lecturers
RS. 300 per hour.
(d) Visiting Instructor:
Rs. 150 per hour.
(e) Instructor / Instructress in Physical Education Grade III
RS. 6, 900 - 6 x 155 - 7, 830 p. m.

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar / Establishments (Academic), University of Jatfna, Sri Lanka, either in person or by sending a money order for Rs. 20 per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the 'Bursar, University of Jaffna,' together with a self-addressed stamped envelope 23 x 10 cm in size.

Applicants from the University System / Government Department/Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

REGISTRAR
University of Jaffna.
Sri Lanka.
1998. 06. 16

(C/4048)


# இயற்கைக் கடன் கழிக்க சென்றவர் சூட்டுக்குப் பலி!

தென்மராட்சி, ஜூன் 21

இயற்கைக் கடன் கழிப்பதற்காக சென்றவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இச் சம்பவம் கொடிகாமம் எழுவன் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த மயிலு இராமச்சந்திரன் (வயது 41) என்பவரே பலியானவராவார்.

இவரின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது,

நேற்று முன்தினம் நடைபெற்ற சுட்டிவேரம் அம்பாள் ஆலய தேர் உற்சவத்திற்காக காவடி, மற்றும் அன்னதான வேலைகளுக்காக அதிகாலையில் எழுந்த இவர் விளக்கு ஏதுமின்றி வளவினுள் இருந்த மலகூடத்திற்குச் சென்றபோதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## சுழற்சி முறையில் நீர் இறைக்கும் இயந்திரம்

வலி. தென்மேற்கு ஜூன் 21

''சீடா'' நிறுவனத்தினால் வழங்கப்படும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் அடுத்த சுழற்சிமுறையில் நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்கு வழங்கப்படும் என பெரும்பாக உத்தியோகஸ்தர் பொ. குகநாதன் உறுதியளித்துள்ளார்.

'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதற்தடவையாக இந்த இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது சுழற்சி முறையில் சகல சம்மேளனங்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென பெரும்பாக உத்தியோகஸ்தர் விவசாயிகளுக்கான கூட்டத்தில் வைத்து கூறினார்.

(ஐ. 185)

## பிரதி நிதிகள் வருகை

யாழ்ப்பாணம் ஜூன் 21

'சேவலங்காபவுண்டேசன்' என்னும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் இருவர் மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த 17ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

'சேவ லங்கா பவுண்டேசனின் விசேட திட்டப்பிரிவு பணிப்பாளர் லக்ஸி எஸ். அபயசேகரா, நிவாரண இணைப்பாளரான ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஹெனிஸ் ஷீட்லர் ஆகியோரே யாழ்ப்பாணம் வருகை தந்தவர்களாவர்.

இவர்கள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், பொதுமக்களையும் சந்தித்து யாழ். நிலைவரம் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

பருத்தித்துறை, வரணி, புத்தூர் ஆகிய இடங்களுக்கு நேரில் விஜயம் செய்த இவர்கள் அங்குள்ள மக்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

'சேவலங்காபவுண்டேசன்' அனுராதபுரம், திருகோணமலை, வவுனியா, அம்பாறை மாவட்டங்களில் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது

(ஐ - 5 - ?)

## கண்காட்சி

வலிகாமம் தெற்கு, ஜூன் 21

சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் அதிபர் வே. தம்பிராசா தலைமையில் கல்விக்கண்காட்சியொன்று கடந்த வாரம் நடைபெற்றது.

ஆரம்ப வகுப்பு, சிரேஷ்ட இடைநிலை வகுப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களின் ஆக்கங்களும் விஞ்ஞான, கணிதபாடம் சம்பந்தமான பொருள்களும் கண்காட்சிக்கென வைக்கப்பட்டிருந்தன.


குழந்தை யேசுவின் 100 ஆவது ஆராதனை

வருகிற 26 - 06 - 98 வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக்கு (புதிய நேரம்) பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் கோவிலில் 100ஆவது கிழமை ஆராதனை கூட்டுப் பூசையுடன் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு வெள்ளியும் மாலை 5-00 மணிக்கு (புதிய நேரம்) ஆராதனை நடைபெறுகின்றதென்பதை அறியத் தருகின்றோம்.

குழந்தை யேசுவின் பக்தன்.

(57006)





பாராட்டி வாழ்த்துகிறோம்

நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாகவும், உத்தியோகப் பற்றற்ற நீதிவானாகவும் நியமிக்கப்பட்டுள்ள

சட்டத்தரணி
திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திருமதி ரீ. விசாலாட்சி,
எஸ். மகேந்திரன்
எஸ். சோதிலிங்கம்
என். நகுலன்
கே. சுப்பிரமணியம்

கமநல சேவை நிலையம்,
புலோலி.

(சி-4055)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலிச் சந்தையை சீரமைப்பதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

திருநெல்வேலிச்சந்தையில் நிலவும் சுகாதார சீர்கேடுகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி சந்தைக் குறைபாடுகள் தொடர்பாக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் பிரதி நிதிகளுக்கும் யாழ்ப்பாணம் நுகர்வோர் பாதுகாப்புச் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தீர் மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடந்ததுகூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் விவரம் வருமாறு

★ நுகர்வோர் சந்தையில் மழை காலத்தில் பொருள்கள் வாங்கும்போது மழையில் நனையாதிருப்பதற்கு ஏற்றவாறு யாழ்ப்பாணம், கல்வியங்காடு சந்தைகளைப் போன்று வசதிகள் செய்யப்படவேண்டும்.

★ மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கென தொடர்ந்து 2ரூபா அறவீடு செய்தல்.

★ வாழைப்பழக் கடை தற்பேதைய துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் இருக்கும் இடத்திற்கு மாற்றப்படவேண்டும்.

★ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினரால் சந்தை புனமைப்புச் செய்யப்படவுள்ளதால் சந்தைக் கடைகள் அமைவிடத்தை மாற்ற வேண்டிய நிலையேற்படலாம் என்பதால் சந்தை ஒப்பந்தகாரர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்படவேண்டும்.

★ கோழி வெட்டுவதற்கும் அதன் கழிவுகளை அகற்றுவதற்கும் தனியான இடம் ஒதுக்குதல்.

★ மலசல கூடத்திற்கு அருகிலிருக்கும் கீரை விற்கும் இடத்தை இடமாற்றம் செய்வது.

★ ஆடிய பாதம்வீதியிலுள்ள கடைக்காரர்கள் தமது பொருள்களை வீதியில் வைத்து வியாபாரம் செய்வதைத் தடுத்தல்.

சந்தையின் ஒரு பகுதித் திருத்த வேலையை ஐ. நா. அபிவிருத்தித்திட்ட ஏற்பாட்டில் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், வட பகுதி மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபை 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை சந்தை புனரமைப்புக்கு ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் மேற்படி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (உ-5-6)

## கால் நடை உணவு விநியோகம்

வாசகர் திருமுகம்

குடாநாட்டில் கால் நடை உணவு விநியோகம் தொடர்பாக இயன்றளவு முயற்சிசெய்து குறைந்த விலையில் கோழித்தீன் கிடைக்கச் செய்த விவசாயஅபிவிருத்திக் கூட்டுறவுச் சமாசத்தினரைபாராட்டியேஆகவேண்டும். அவர்களது முயற்சி மேன்மேலும் தொடர வேண்டும். குடாநாட்டில் சகலவிதமான கால்நடை உணவுகளும் கிடைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு ஆகும்.

இந்நிலையில் சமாசத்தினர் பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

★ தற்போதைய கொழும்பு விலைக்கும் இங்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ள விலைக்கும் இடையே பெருமளவு வித்தியாசம் இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

★ தரமான கோழித்தீன் விநியோகத்தை உறுதிப்படுத்துதல். இதற்காக கம்பனியால் இறுதியாக விநியோகம் செய்த கோழித்தீனை கொள்வனவு செய்தல் (தற்போது இறக்கப்பட்டது சற்று நாள் சென்றது.)

★ தரமற்ற கோழித்தீன் விநியோகம் செய்தால் பாதிக்கப்படுவது கோழி வளர்ப்பாளர்களே. முட்டை உற்பத்தி பாதிக்கப்படும். எனவே தரமான கோழித்தீன் விநியோகம் அவசியம். இவ்வாறு செய்தால் கூடுதலான காலத்திற்கு சேமித்து வைக்கவும் முடியும்.

★ மழைகாலம் ஆரம்பமாகும் முன்னர் போதுமளவு கையிருப்பில் பேணல்.

★ எதிர் காலத்தில் கோழிக்குஞ்சு விநியோகத்தை மட்டுப்படுத்தல்.

★ கோழித்தீன் மட்டுமன்றி கால்நடைகளுக்கு தேவையான சோளம். தவிடு, பிண்ணாக்கு, மில்க்மாஸ், புறொயிலர் மாஸ் போன்றவற்றையும் விநியோகம் செய்தல்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில்கவனமெடுத்து எதிர்காலத்தில் குடாநாட்டு மக்களுந்த கால்நடை வளர்ப்பில் ஊக்கமளிக்கவேண்டும். கால்நடை வைத்தியர் பிரிவும் விவசாய அபிவிருத்திக் கூட்டுறவுச் சமாசமும் இயன்றளவு முயற்சி செய்து உதவ வேண்டும்என்பதே எமது வேணவாவாகும்

தெ. சபேசன்
(கால்நடை வளர்ப்போர் சார்பில்)
சாரையடி, புலோலி

## புனரமைப்பது எப்போது?

சுதுமலை வடக்கு பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் இப்பகுதியிலுள்ள குளங்கள், வாய்க்கால்கள் செப்பனிடப் படாமையால் மழை காலத்தில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சுதுமலை அம்மன் கோவிலின் குளம் ஆழமாக்கப்படவில்லை. இப்பகுதிகளில் தேங்கி நிற்கும் நீர் வடிந்தோடும் வடிகால் குப்பை, தடிகள் என்பன நிறைந்து காணப்படுகின்றன. இவ்வடிகால் துப்புரவாக்கப் படாமையினால் நீர் தொடர்ச்சியாக வெளியேற முடியாமல் தேங்கி நிற்கக் கூடிய சாத்தியம் உருவாகியுள்ளது. அத்துடன் அயலவர்கள் சிறு சிறு கட்டடங்கள் கட்டுவதற்கு வாய்க்காலிலுள்ள மணலை எடுப்பதால் பெரிய குழிகள் ஏற்பட்டு அவற்றில் நீர் தேங்கும் வாய்ப்புண்டு.

உதாரணமாக அண்மையில் பெய்த சிறு மழையின் போதுகூட இப்பகுதிகளில் நீர் தேங்கியதால் பொதுமக்கள் பாடசாலைச் சிறுவர்கள் போன்றோர் பெரும் இடர்களை சந்தித்தனர். தற்போது ஏனைய இடங்களிலுள்ள குளங்கள் வாய்க்கால்கள் போன்றன புனரமைக்கப்பட்டுவருகின்றன.

ஆனால் சுதுமலைப்பகுதி பற்றி சம்பந்தப்பட்டோர் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. இனியாவதுசம்பந்தப்பட்டபகுதியினர் இப்பகுதிமக்கள் நலன்கருதிநடவடிக்கை எடுப்பார்களா?

க. ஜெகசோதி
சுதுமலை

## வாசகர் கவனத்துக்கு

தங்களுக்குள்ள குறைகள், பொதுப் பிரச்சினைகள், அரசாங்கத் திணைக்கள அதிகாரிகளின் அசமந்தம், சமூகப் பிரச்சினைகள் குறித்து இப்பகுதிக்கு எழுதுவோர் தமது சொந்தப் பெயரையும் விலாசத்தையும் எமது தகவலுக்காக எழுத வேண்டும். புனைபெயரில் எழுத விரும்புவோரும் சொந்தப் பெயர், விலாசத்தைக் கட்டாயமாகக் குறிப்பிட்டாக வேண்டும், பெயர், விலாசம் இடப்படாத கடிதங்கள் பிரசுரத்துக்குப் பரிசிலனை செய்யப்படுவதில்லை. கடிதம் எழுதப்பட்ட தாளிலேயே பெயர், விலாசம் என்பன குறிப்பிடப்பட வேண்டும்.

ஆசிரியர்

## மிதிவெடியில் சிக்கிய பசு

வட்டுக்கோட்டை சங்கரத்தை சந்திக்கு அருகில் மேய்ச்சலுக்காகக் கட்டியிருந்த பசுமாடு கடந்த புதன் பிற்பகல் 4.30 மணியளவில் மிதிவெடியில் சிக்கியது. இதனால் அந்தப் பசுவின் ஒரு கால் சிதறிய நிலையில் காணப்பட்டது. மக்கள் கூடும் மேற்படி சந்திக்கு அண்மையில் பாரிய சத்தத்துடன் மிதிவெடி வெடித்ததால் வீதி வழியே சென்ற பொதுமக்கள் பீதியடைந்தனர். (ஐ-12)

## சுதேச மருத்துவ கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 21

மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் டாக்டர் கே. பால சுப்பிரமணியத்துடன் ஆயுர்வேத வைத்தியர்கள், மருந்து கலவையாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கான சந்திப்பு ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

சம்பந்தப்பட்டோரை இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி கேட்டுள்ளார். (உ-5)

## அருளப்பர் பெருவிழா

யாழ். சுண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய 110 ஆவது வருடப் பெருவிழா எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவுள்ளது.

அன்று காலை6.30மணிக்கு திருநாள் திருப்பலி யாழ். மறைக் கோட்ட முதல்வர் அருட்திரு ஏ. சி. கிறிஸ்தோப்பர் அடிகளாரால் ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ் வருடத்திற்கான ஆலய திருவிழாவிற்கான கொடியேற்றம் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது. தற்போது இவ்வாலயத்தில் நவநாள்களுக்கான மாலை ஆராதனைகள் நடைபெறுகின்றன. நற்கருணை ஆராதனை எதிர்வரும் செவ்வாய் மாலை நடைபெறும். (உ-51)

## யாழ். ஆஸ்பத்திரியின் பிரசவ வார்ட் மீண்டும் பழைய இடத்தில்

வவுனியா, ஜூன் 21

யாழ். ஆஸ்பத்திரியிலுள்ள பிரசவ வார்ட் பழைய இடத்தில் இயங்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சுப் பணிப்பாளர் டாக்டர் ஜெகநாதன் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியின் பிரசவ வார்ட் பாதுகாப்புப் பிரதேசத்துக்கு மிகச் சமீபமாக அமைந்துள்ளதால் அந்த 'வார்ட்' அந்த இடத்தில் இயங்க முன்னர் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதனால் அந்த வார்ட் தற்போது வசதியற்ற வேறு ஒரு இடத்தில் இயங்கிவருகிறது.

பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதையடுத்து, அந்த வார்ட்டின் பழைய கட்டடம் புனரமைக்கப்பட்டு அது அங்கு விரைவில் இயங்கத் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-164)

## ஆசிரியர்கள் பிரச்சினை: மேல் மாகாண சபை பணிப்பாளருடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் இருந்து மேல் மாகாணப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் நிலைகுறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடந்த வெள்ளியன்று மேல் மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் எம். பி. சி. பண்டாரவைச் சந்தித்து கலந்துரையாடியது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், நிதிச் செயலாளர் யே. யேசுதாசன், நிர்வாகச் செயலாளர் சி. சரவணபவானந்தன் ஆகியோர் பங்குபற்றினர்.

மேற்படி சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட கல்விப் பணிப்பாளர் ஏற்கனவே வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சினால் விடுவிக்கப்பட்டவர்களில் ஏறத்தாழ 110 ஆசிரியர்கள் வரையில்தான் நாம் ஏற்றுக்கொள்ள முடியும் எனவும்

இவர்களை விடுவிக்கும்படி மாகாண அமைச்சுச் செயலாளரைக் கோரியுள்ள போதிலும் அதற்கான பதில் கிடைக்காத காரணத்தினால் பல ஆசிரியர்கள் இடமாற்றம் பெறமுடியாதிருப்பதாகவும்— தெரிவித்தார்.

தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் நிர்வாகத் திறமையின்மையால் ஏறக்குறைய 75 ஆசிரியர்கள் சில மாதங்களாகச் சம்பளமும் இல்லாது வேலையும் இல்லாது அலைந்து திரிகிறார்கள் என்று தெரிவித்தார். (உ-7)

## 5,000 ரூபா நிதி உதவி

பருத்தித்துறை ஜூன் 21

கோப்பாய் கல்விக் கோட்டத்திலுள்ள ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் 17 வயதுக்குட்பட்ட கரப்பந்தாட்டக் குழுவினர் யாழ். மாவட்ட மட்டத்தில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர். இப் பாடசாலை கரப்பந்தாட்ட வீரர்கள் திருகோணமலைக்குச் செல்வதற்கு கோப்பாய் கல்வி அபிவிருத்தி சபையின் நிதியில் இருந்து 5 ஆயிரம் ரூபா வழங்குவதென அதிபர்கள் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டதென பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் தெரிவித்தார். (ஐ-118)

## ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் வருவர்

ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த இரு அதிகாரிகள் எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் பிறாங் ஜே பொல்மன், இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரடாஸிக் கொன்டே ஆகியோரே யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள அதிகாரிகளாவர்.

ஜூலை 6 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் இவர்கள் இங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானிப்பார்கள். (உ-5-6)

## தீவுப் பகுதிக்கு எழுதுவினைஞர்கள்

தீவுப்பகுதி பிரதேசச் செயலகங்களிலுள்ள எழுதுவினைஞர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுப் பிரதேசச்செயலகத்திற்கு ஏழு எழுதுவினைஞர்களும், ஒரு தட்டெழுத்தாளரும், வேலணைக்கு மூன்று எழுது வினைஞர்களும், ஊர்காவற்றுறைக்கு ஐந்து எழுதுவினைஞர்களும் அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஏனைய பிரதேசச் செயலகங்களிலுள்ள வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5-6)

## சண்டிலிப்பாய் பிரிவு ஓய்வூதியர் விவரம் — செயலகத்தால் சேகரிப்பு

வலி. தென்மேற்கு, ஜூன் 21

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஓய்வூதியர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஓய்வூதியர்களுக்கும் இரண்டு இணைப்படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்படிவங்களைப் பூர்த்தி செய்து அவ்வப்பகுதி கிராம அலுவலரின் சிபார்சுடன் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி பிரதேச செயலர் நா. வேதநாயகன் கேட்டுள்ளார். (ஐ-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஏமாற்று வேலை

மாகாண சபைத் தேர்தலுக்கான ஒழுங்குகளைச் செய்வதாகக் காட்டிக் கொண்டாலும் அரசு கடைசி வேளையில் தேர்தல்களை ஒத்திவைக்கும் என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்று தான்.

ஆனால்மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பை அரசு இந்தளவு விரைவில் கேட்கும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அவசரகாலத்தைப் பயன்படுத்தி தேர்தலை ஒத்திவைப்பதனை விட, ஒழுங்குகளைச் செய்வதற்கு முன்னரே எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைக் கேட்டிருப்பது வித்தியாசமே!

மாகாண சபைத் தேர்தலில் மக்கள் ஆதரவு ஆளுந்தரப்புக்கு மிகஅதம நிலையிலேயே இருக்கும் என்பது வெளிப்படையானது. இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு என்றுகூறிப்பதவிக்குவந்த அரசு அதற்கு நேர் விரோதமாகப் போரைத் தொடங்கியது. ஆனால் அதிலும் வெற்றி காணாத ஒரு கட்டத்தில் தேர்தல் ஒன்றை நடத்துவது எந்த வகையிலும் ஆளுங்கட்சிக்கு வாக்குத் தேடித் தராது.

இதுவே உள்ளாந்தரம்.

★ இப்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துவது உசிதமல்ல என்று பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இது முதலாவது காரணம்.

—ஆனால் போர் 'உக்கிரமாக'' நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடக்கு-கிழக்கில், மாகாண சபைத் தேர்தல் நடத்தலாம் என்று பாதுகாப்புப் பிரிவினர் அனுமதி வழங்கியிருப்பது விசித்திரமானதாகும்.

★ மாகாண சபைத்தேர்தலை நடத்தினால் பாதுகாப்புக்கு இராணுவத்தை ஈடுபடுத்த வேண்டி ஏற்படும். போர் நடைபெறும் போது தேர்தல் பாதுகாப்புக்கு இராணுவத்தினரை ஈடுபடுத்துவது போர் முனையில் பின்னடைவை உண்டாக்கும்.

தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசுகூறும் இரண்டாவது காரணம் இது.

இந்தக் காரணங்களை ஏற்றுக்கொண்டு தேர்தலை அடுத்த வருடத்துக்கு ஒத்திப்போட ஒத்துழைப்புத் தருமாறு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியிடம் கேட்கப்பட்டுள்ளது.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள விரும்பும் ஐக்கிய தேசியக்கட்சி, அரசின் கோரிக்கைக்கு மனப்பூர்வமாக இணங்கும் என்று எதிர்பார்ப்பது சுத்த முட்டாள்தனம்!

ஆனால் தனது இயலாமைகளை மறைப்பதற்கு அவசரகாலச் சட்டத்தைப் பெரும் திரையாகப் பயன்படுத்தி வரும் அரசு, தான் நினைத்ததைச் சாதிக்கும் சாத்தியம் நிறையவே உண்டு.

போரை மேலும் தீவிரப் படுத்தவும், அரசியல் தீர்வு நடவடிக்கைகளைப் பின் தள்ளவும் தேர்தல் ஒத்திவைப்பு அரசுக்குப் பெரிதும் கை கொடுக்கும்.

இந்த இலட்சணத்தில் தனது ஆட்சிக்காலத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று அரசு வார்த்தை மாய்மாலம்போடுவது சுத்த ஏமாற்று வேலையே!

---

### விசேட அ. அட்டை வைத்திருப்பினும்

# தேசிய அடையாள அட்டை பெறுவது கட்டாயமானது என வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாவட்டத்தில் புதிதாகத் தேசிய அடையாள அட்டை பெறவேண்டியவர்கள் தமது தேசிய அடையாள அட்டையை இன்னமும் பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளாதிருப்பவர்கள் உடனடியாக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படையினர் விசேட அடையாள அட்டைகளை வழங்கி வருவதனால் தேசிய அடையாள அட்டைகளைப் பெற வேண்டியதில்லை என்ற தவறான மனோபாவம் மக்களிடம் தோன்றியுள்ளது. இதனாலேயே தேசிய அடையாள அட்டையைப் பலர் பெற்றுக் கொண்டிருக்கவில்லை என்று தெரியவந்துள்ளது. எனினும் இராணுவத்தினரால் வழங்கப்படும் அடையாள அட்டைகள் தற்காலிகமானவை என்றும் ஆள் அடையாளத்தை தெளிவாகவும், சரியாகவும் உறுதி செய்வதற்கு தேசிய அடையாள அட்டையே முக்கியமானது என்றும் அதிகாரிகள் வலியுறுத்தி உள்ளனர்.

எனவே இதுவரை தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்கள் உடனடியாக தமது கிராம சேவகரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று உதவி அரசாங்க அதிபருடாக ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கு அவசியமான பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தை இங்கு பெறமுடியாதவர்கள் அவற்றைப் பெறுவதற்குகொழும்பு பதிவாளர் நாயக அலுவலகத்தில் பிரத்தியேகமாக நிலையம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளதாகவும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

(ஐ-6)

## கண்காட்சி ஒத்திவைப்பு

செம்பியன்பற்று, ஜூன் 21

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையும், கிராம அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து கடந்த சனிக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வரை நடத்த இருந்த தையல் மனையியல் கண்காட்சி பிற்போடப்பட்டுள்ளதாக மருதங்கேணி உதவி அரச அதிபர் சி. பசுபதி தெரிவித்தார். (ஐ-36)

## நாளை முதல் நிவாரணம்

செம்பியன்பற்று, ஜூன் 21

வடமராட்சி கிழக்குப்பகுதி மக்களுக்கான 62 'ஏ' 'பி' புள்ளிகளுக்கான நிவாரணப் பொருள்கள் நாகர் கோயில் கிளைக் கடையிலும், மருதங்கேணி கிளைக் கடையிலும் நாளை திங்கட்கிழமை முதல் விநியோகம் செய்யப்படும் என மருதங்கேணி உதவி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

(ஐ-36)

## நாகர் கோவில் பகுதியில் 2 ஆவது கூ. சங்க கிளை

செம்பியன்பற்று, ஜூன் 21

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் இரண்டாவது கூட்டுறவுக் கிளைக் கடையினை மருதங்கேணி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கடந்த வெள்ளியன்று திறந்துள்ளது,

இப்பகுதி படையினரின் கட்டுப்பாட்டில் வந்ததைத் தொடர்ந்தே கூட்டுறவுக் கடைகளை அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்கு முன்னர் இக்கூட்டுறவு கிளைக்கடைகள் பருத்துறை பகுதியிலேயே இயங்கி வந்தன.

தற்போது திறக்கப்பட்டுள்ள கூட்டுறவுக்கடையில் மீனவ நிவாரணமும் இடம்பெயர்ந்தோர் நிவாரணமும் விநியோகிக்கப்படஉள்ளதாகவும்—

நிவாரணப் பொருள்களை மக்கள் கட்டுப்பாடு இன்றி வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மருதங்கேணி உதவிஅரச அதிபர் சி. பசுபதி தெரிவித்தார்.

(ஐ-36)

## உழவு இயந்திரம்

வடமராட்சி, ஜூன் 21

பருத்தித்துறை நகரசபையின் தேவைக்கெனப் புதிய உழவு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதற்கான நிதியை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு வழங்கியுள்ளது.

இதே நேரம் இச் சபையிலுள்ள பழுதடைந்துள்ள உழவு இயந்திரத்தைத் திருத்திச் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (ஐ-173)

## சைக்கிள் திருட்டு

அரியாலை ஜூன் 21

வீட்டிற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புதிய லுமாலா சைக்கிள் கடந்த வியாழக்கிழமை திருடப்பட்டுள்ளது. இச்சம்பவம் கொழும்புத்துறை பாண்டியந்தாழ்வு பகுதியில் இடம்பெற்றது.

(ஐ-17)

### பருத்தித்துறை

## புதிய மரக்கறிச் சந்தையில் 50 கடைகள் அமைக்கப்படும்

வடமராட்சி, ஜூன் 21

பருத்தித்துறை பழைய பஸ் நிலைய சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய மரக்கறிச்சந்தைப் பகுதியில் 50 கடைகள் பருத்தித்துறை நகரசபையால் அமைக்கப் படவுள்ளன.

முன்னர் பருத்தித்துறை மருதடியில் இருந்து வந்த பழைய மரக்கறிச் சந்தைக்குள் கடைகளை வைத்திருந்த கடைக்காரர்களுக்கு இக் கடைத் தொகுதியில் அமையும் கடைகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் என பருத்தித்துறை நகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-173)

### தார் பரல்கள் வந்தன

## வீதித் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பம்

வடமராட்சி, ஜூன் 21

தார் இன்மையால் தடைப்பட்டிருந்த வீதித் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றுக்கென பெரும் எண்ணிக்கையான தார் பரல்கள் 'மாஹோ' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. இவை இறக்கி முடிக்கப்பட்டதும் வீதித் திருத்த வேலைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

### நாளை

ஆனி - 8

திங்கட்கிழமை

திதி: திரயோதசி

பிற்பகல் 01.44 வரை.

நட்சத்திரம்: கார்த்திகை முற்பகல் 9.00 வரை.

சுபநேரம் 11.54 - 01.24

ராகுகாலம்: 07.24 - 08.54

(பகலுக்கும் [illegible] பழைய நேரப்[illegible]

### உதயவாக்கு

குணத்தில் மிக உயர்ந்தவனும், அடிமட்டத்தில் இருப்பவனும் மாறவே மாட்டார்கள்.

— கன்பூசியஸ்

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ சிவபூதவராயர் சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் (ஐ)

★ ★ ★

வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத காசி விசுவநாதர் (சிவன்கோயில்) ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம் மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், ஆனி உத்தரமான அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். புதன்கிழமை காலையில் ஆருத்திரா தரிசன நிகழ்வு சிறப்பாக நடைபெறும்.

(அ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 21

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிறு நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும, மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

கடந்த 5 ஆண்டுகளின் பின் இந்த ஆலயத்தில் மஹோற்சவம் இம்முறை இடம்பெறுகிறது. (ஐ-30)

★ ★ ★

சண்டிலிப்பாய், ஜூன் 21

பிரசித்தி பெற்ற மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயவருடாந்த இறுதி நாள் உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌவுந்தரநாயகம் ஆண்டகைதலைமையில் திருப்பலி பூசையும், அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

(ஐ-135)

★ ★ ★

வலிகாமம் தெற்கு ஜூன்21

வண்ணை கிழக்கு கந்தர் மடம் பழம்வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான சாந்தீக மகோற்சவம் கடந்த 12.ஆம் திகதி வெள்ளிக் கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாளைதிங்கட்கிழமைமாலை ரதோற்சவமும், மறுநாள் பகல் 108 சங்காபிசேகம், தீர்த்த உற்சவம் ஆகியனவும் நடைபெறும் புதன்கிழமை மாலை வைரவர் சாந்தி நடைபெறும். (ஐ-152-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 21

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து10தினங்கள் இடம் பெறும்.

மகோற்சவக் கிரியைகளை சிவ ஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள் நடத்திவைப்பார்.

(ஐ - 7, 30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 21

அனலையம்பதி புளியந்தீவு அருள்மிகு ஸ்ரீ நாகேஸ்வரன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை 5 – 57 முதல் 6 – 40 வரையுள்ள சுபவேளையில் இடம் பெறும்.

கும்பாபிஷேகத்திற்கான பூர்வாங்கக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதிவியாழக் கிழமை காலை 8மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

கிரியைகள் ஊரெழு, சிவாச்சாரியதிலகம், சிவ ஸ்ரீ பால. பஞ்சாட்சர சிவாச்சாரியார் தலைமையில்இடம் பெறும்.

(ஐ-ரீ-7-8-30)

## கலந்துரையாடல்

இலங்கை வித்தியாலய அதிபர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல்11 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க 25 பேர் கொண்ட குழு ஜனாதிபதியைச்சந்திப்பது தொடர்பான ஒழுங்குகள் இக் கலந்துரையாடலில் ஆராயப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## பவிலியன் அமைப்பு

திருநெல்வேலி, ஜூன் 21

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஒரு பகுதியில் பார்வையாளர் தங்கும் மண்டபம் (பவிலியன்) ஒன்று தற்காலிகமாக அமைக்கப்படவுள்ளது. அத்துடன் மல சல கூடம் ஒன்றும் நிறுவப்படவுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரினால் இதற்கென ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கல்லூரி அதிபர் க. இராசதுரை தெரிவித்தார். ( ஐ-135 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள், வாழ்வின் முன் மாதிரிகளே!

எம் வாழ்வில் நாம் சொல்லும் வார்த்தையும், வாழ்வும் எம்மை வழிகாட்டி வருவோரால் விதைக்கப்படுபவையே என்பதை எண்ணிப் பார்த்தால் உணர்ந்து கொள்ள முடியும். அந்த வழிகாட்டிகளாக பொறுப்புமிக்கோராக பெற்றோர், பெரியோர், ஆசிரியர், ஞான வழிகாட்டிகள், நல்ல நண்பர்கள், நல்ல தலைவர்கள் என நம் சூழலில் நாம் காண்பவர்களே எம் முன் மாதிரிகள்.

அன்று முன் மாதிரிகளாக வாழ்ந்து வழி காட்டியவர்களே இரண்டாயிரமாண்டு

## யோசப்பாலா

கிறிஸ்தவ பயணத்தில் கிறிஸ்துவின் சாட்சிகளாய், கிறிஸ்துவின் நற்செயல்களை, செய்திகளை வாழ்வாலும் வார்த்தையாலும் விதைத்து முன் மாதிரிகளாய், மனிதர்களாய் எம் வாழ்வில் நினைவு கூரப்படுவதை நாம் இன்றும் காண்கின்றோம்.

மனிதர்களே இந்தப் புனிதர்கள். எம் வாழ்வின் முன் மாதிரிகள் என்று எமக்கு கிறிஸ்தவம் அவர்கள்வாழ்வை எமக்கு முன் வைத்தது. அவர்கள் வாழ்வை நினைவு கூரவும் மகிழ்ந்து போற்றவும் அவர்கள் வாழ்வை பின்பற்றவுமே எமக்கு முன் மாதிரிகளை புனிதர்களாக அறிமுகஞ் செய்தது.

இரண்டாயிரம் ஆண்டுக்கு முன் கிறிஸ்து வாழ்ந்த நற்செய்தியை எமக்குத் தருவதில் அவர்கள்வாழ்வே அர்ப்பணமானது என்பதை நினைவு கூருவது மட்டும் தானா எம்கடமை? என்பதனை சற்று ஆழமாக சிந்திக்க அழைப்பும் அறைகூவலும் இக்காலத்தில் விடப்படுகிறது; இன்றைய காலத்தின் முன் மாதிரிகள் நீங்களே! உங்கள் வாழ்வை புடமிட்டு வழி காட்டும் முன் மாதிரிகளாக வாழ அழைப்பு விடப்படும் செய்தி ஒன்று தரப்படுகிறது.

"நான் உங்களுக்குசொல்ல வேண்டியவை இன்னும் பல உண்டு. ஆனால் அவற்றை இப்பொழுது உங்களால் தாங்கமுடியாது. உண்மையின் ஆவியானவர் வந்த பின் நிறை உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார். அவர்பேசுவதை தாமாகப்பேசுவதில்லை, கேட்பதையே பேசுவார். வரப்போகிறவர் உங்களுக்கு அறிவிப்பார். உங்களுக்கு அறிவிப்பதை எனக்குள் இருந்தே பெற்றுக் கொள்வதால் அவர் என்னை மகிமைப் படுத்துவார். தந்தையுடையதெல்லாம் என்னுடையவையே. எனவேதான் உங்களுக்கு அறிவிப்பதை எனக்குள் ளிலிருந்து பெற்றுக்கொள்கிறார் என்றேன்." என்ற யேசுவின் நற்செய்தி எமக்கு நம்பிக்கை தரவேண்டும்.

நாம் செய்யும் எந்த செயலிலும் எம்மை வழிநடத்த ஒருசக்தி அருளப்பட்டுள்ளது. அந்த சக்தி எம்முன்னேதான் உண்டு. அதனை நன்கு பயன்படுத்தவே எம் முன்மாதிரிகளின் வாழ்வு, நம்பிக்கை தூய ஆவியின் வழிகாட்டலால் வழி நடத்தப்படுகிறது என்பதை உணர்ந்துகொண்டோமானால், நாமும் முன்மாதிரிகளாக எம்வாழ்வை மாற்றிக் கொள்ள எமது சொல், செயல் வாழ்வில் புனிதம் காத்து பொறுப்புக்களை உணர்ந்தவர்களாய் எமது சக்தியை எமது, வாழ்வில் தூய ஆவியின் அருளை வெளிப்படுத்தும் முன்மாதிரியாகவாழ வழி காட்டிகளாக நாமும் மாறுவோம்.

## ஞாயிறு நற்பிரசாதம்

## மக்கள் முகம்



தெல்லிப்பழை புகையிரதநிலைய வீதியைச் சேர்ந்தநாகரத்தினம் பத்மநாதன் மல்லாகம் மாவட்டநீதிபதி மு. திருநாவுக்கரசு முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளையின் ஆட்சிக்குழு உறுப்பினரும், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க்த்தின் முன்னாள் தலைவரும், நீண்டகால அரசியல்வாதியும், தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் பணிப்பாளர் சபை, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றின் முன்னாள் உறுப்பினருமாவார்.

சிறந்த சமய, சமூகசேவையாளராகிய இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் மொஸ்கோ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

கந்தரோடையைச் சேர்ந்த ஆனைக்கோட்டை உயரப்புலம் வாசியான ஆ. சி. கணேசவேல் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

கந்தரோடை உபதபாலதிபராகிய இவர் கடந்த 20 வருடமாக யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக கடமை புரிந்துள்ளார்.

இவர் மானிப்பாய் ப. நோ. கூ. சங்க கிளை 20 இன் தலைவரும், உயரப்புலம் ஆனைக்கோட்டை கிராம அபிவிருத்திச்சங்க செயலாளரும், அகில இலங்கை உபதபாலதிபர் சங்க யாழ். கிளை நிர்வாகிகளில் ஒருவரும், உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய திருப்பணிச்சபைச் செயலாளரும், ஆனைக்கோட்டை பாரதி சனசமூக நிலைய உபதலைவரும் ஆவார்.

இவர் யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவரும், ஸ்கந்தவரோதயக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முன்னாள் செயலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

யாழ்ப்பாணம் 5 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த அன்ரன் சிவலிங்கம் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர் இளைப்பாறிய கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய உத்தியோகத்தரும், மொழிபெயர்ப்பாளருமாவார்.

★

# தமிழர் மரபுக் கல்வி குறித்த ஆய்வுக்கு அத்திவாரக் கல்லாக அமையும் நூல்

இன்று கல்வி பரந்த பரிமாணங்களில் அனைத்துத் துறைகளையும் ஆக்கிரமித்துள்ளது. எமது தமிழின கல்வி மரபு, யாழ்ப்பாணத்தின் கல்வி மரபுகள் எம் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கும் பண்பாட்டுச் செழுமைக்கும் உரமூட்டியவையாகும். இம் மரபுகள் தொடர்பான ஆய்வுகள் இன்னும் குழந்தை நிலையிலேயே உள்ளன. இத்துறையில் எமது கல்விச் சமூகமும், பொது மக்களும் மிகுந்த கவனம் எடுக்க வேண்டிய காலம் இதுவாகும். ஏனெனில் எமது மரபுகள், பண்பாடுகள், விழுமியங்கள் பற்றிய ஐயங்கள் பரவலாக எழுந்துள்ளன. பல சமூக விரோதச் செயல்கள் எமது சமுதாயத்தில் தாண்டவமாடத் தொடங்கிவிட்டன.

இலங்கைத் தீவில் வடக்கு — கிழக்கு, மற்றும் பகுதிகளில் வாழும் தமிழர்களின் கல்வி மரபுகள் மிகவும் வீரியமுள்ளவையாக மிளிர்ந்துள்ளன. இம் மரபுகள் ஒரு கல்வியாகவே பரிணமித்துள்ளன என்பதை இணுவில் கிராமத்தினை அடிப்படையாக வைத்து திரு. தா. அமிர்தலிங்கம் "இணுவில் கிராமத்தின் கல்வி மரபு" என்ற நூலை எழுதியுள்ளார். இந் நூல் அக்கிராமத்தின் மரபுகளைக் கூறினாலும் அவை யாழ்ப்பாணத்தினதும், தமிழர்களினதும் கல்வி மரபுகளாகப் பொருந்தி வருகின்றமை சிறப்பாகவுள்ளது.

நூலின் முதலாவது இயலில் இணுவில் கிராமத்தின் வரலாற்றுப் பின்னணி, புவியியல் பின்னணியினூடாக கல்வி மரபுகள் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இயலில் இணுவில் கிராமத்தின் கல்வி மரபை அறிய உதவும் தாய் மொழிக்கல்வி, சமயக்கல்வி, தொழிற்கல்வி, மருத்துவக் கல்வி, இசைக்கல்வி, நாடகக்கல்வி, கூட்டுறவுக்கல்வி என்ற தலைப்புக்களில் ஆராயப்பட்டு பல முக்கிய தகவல்கள் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது இயலில் இணுவில்கிராமத்தின் கல்விமரபை உருவாக்கிய காரணிகள் எவை என்பதும், அவற்றுடன் பொதுவான கல்விக் கொள்கைகள் உருவாவதற்கான சூழ்நிலைகள் எவ்வாறு உருவாகின என்பதும் ஆராயப்பட்டுள்ளது.

வரலாற்றுப் பின்னணியில் அந்தக்கவி வீரராகன் யாழ் வாசித்துக் கவி பாடி யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்றிருந்தான். தமிழ் நாட்டிலிருந்து ஏழு குடும்பக் குழுக்களை வருவித்து யாழ்ப்பாணத்தில்குடியேற்றினான். அவர்கள் ஏழு இடங்களில் குடியமர்த்தப்பட்டார்கள். தெல்லிப்பழை, இணுவில், வட்டுக்கோட்டை, மயிலிட்டி, இருபாலை, காரைநகர், நெடுந்தீவு இவ்வாறாக யாழ்ப்பாணக் குடியேற்றமும் தொடர்ந்து ஆட்சியிலும் வளர்ந்தன என்றும், இந்தியாவுடனான தொடர்புகள் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வருகின்றன என்றும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நூல் வரிசை

தாய் மொழிக்கல்வி பரம்பரை பரம்பரையாக வளர்ச்சியடைந்திருந்தது என்றும், இது சமயக்கல்வி மரபுகளுடன் தொடர்புற்றிருந்ததாகவும் ஆசிரியர் விளக்குகின்றார். இணுவில் கிராம மக்கள் குடியேறிய காலம் தொட்டு இந்து மதத்தைப் பின்பற்றியவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அச்சமயநெறி வாழ்க்கையில் தெரிந்தும் தெரியாமலும் ஆதிக்கம் செலுத்தி வந்ததாகவும், பழைய காலம் முதல் இவர்கள் இந்துக்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக இங்குள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள் விளங்குகின்றன. இந்துக்கடவுளர்கள் அனைவருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பல ஆலயங்கள் உள்ளதையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார். இவ்வாறாக மருத்துவக் கல்வி, கூட்டுறவுக் கல்வி ஆகிய துறைகள் பாரம்பரியமாக மக்களால் பின்பற்றப்பட்டு வரும் முறைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

பொதுவான கொள்கைகள் கல்வித்துறையில் உருவாக்கப்பட்டு செயற்படுகின்ற போதும் சூழ் நிலைகளின் காரணமாக மரபு ரீதியான அம்சங்கள் தொடர்ந்தும் அழியாது இருக்கவே செய்கின்றன. தாய்மொழிக்கல்வி அழியாது பொதுக்கல்விக் கொள்கைகளுடன் இணைந்து செல்கின்றது. சமயக்கல்வியிலும் இவ்வித போக்கு உள்ளது. கூட்டுறவுக் கல்வியிலும் மேலைத்தேயப் போக்குகளுக்கு இடமளித்த போதிலும் கிராம மக்களின் ஒற்றுமையுடனிணைந்த கூட்டுறவு உணர்வுகள் முற்றாக மறையவில்லை. தொழிற்கல்வி பல பரிமாணங்களில் வளர்ந்திருப்பினும் அதில் சில மரபுகள் கைத்தொழில்களாகத் தொடர்கின்றன. கலைத்துறைகளில் மரபுக் கல்விக்கு மிக முக்கிய தன்மைகள் இன்றும் வழங்கப்படுகின்றது போன்ற கருத்துக்கள் ஆசிரியரால் இயல்பான மொழி நடையில் விளக்கப்பட்டுள்ளது.

"இணுவில் கிராமத்தின் கல்வி மரபு" என்ற இந் நூல் தொடர்ந்து தமிழர்களின் மரபுக்கல்வி பற்றி ஆராய்பவர்களுக்கு ஓர் அத்திவாரக் கல்லாகத் திகழும் என்பது உறுதி.

★

- பா. தனபாலன்

நூல்
இணுவில் கிராமத்தின் கல்வி மரபு
ஆசிரியர்:
தா. அமிர்தலிங்கம்

## நீத்தார் நயப்புரை

கடந்த வாரம் உதயன் சூரியகாந்தி பகுதியில், 8ஆம் பக்கத்தில் வெளியான சி. ஞா. கணேச பண்டிதர்குறித்த நீத்தார் நயப்புரையை எழுதியவர் பண்டிதர் சி. கார்த்திகேசு ஆவார்.

## வருடாந்த விழா

வலிகாமம் தெற்கு, ஜூன் 21

சுன்னாகம் கோட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த விழா இம்மாதம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் தி. நவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

உடுவில் கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், சேவைக்கால (ஆரம்பக்கல்வி) ஆசிரியர்கள் வ. குகவேள், வி. ஆ. இராமச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் விழாவில் கலந்து கொள்கின்றனர்.

நினைவுப் பேருரையை தெல்லிப்பழை கோட்ட ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆலோசகர் திருமதி இராமலிங்கம் நிகழ்த்துவார்.

## சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பகம்

## காந்தியின்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

கடவுள் பேரில் சிலர் அநீதியும், அக்கிரமும், கொடூரமும் செய்வதினால், அவனில்லாமல் போக மாட்டான். அவனை வைத்துச் செய்யப்படும் அக்கிரமங்களை அவன் பொறுத்து வருகிறான். பொறுத்தாலும் அவனை அலட்சியம் செய்யமுடியாது. மகா பயங்கரன். கடன்களை எல்லாம் ஒன்றுவிடாமல் வசூலிப்பான். நிர்த்தாட்சிண்யமாக வசூலிப்பான். வட்டிக்கு கடன் கொடுக்கின்ற எவனும் அவனைப் போல் கண்டிப்புக்காரன் இல்லை.

மனிதர்களோ, மிருகங்களோ மற்றப் பிராணிகளிடம் நாம் எந்த மாதிரி நடந்து கொள்ளுகிறோமோ அவ்வித அனுபவத்தையே நாமும் பெறுவோம். நியதியை அறியாமல் செய்து விட்டேன் என்றால் அது அவனிடம் ஒரு சாக்காகச் சொல்லது. ஆயினும் அவனது கருணைக்கு எல்லை இல்லை. குற்றத்தை உணர்ந்து மனம் வருந்துவதற்கு எப்போதும் இடம்தருவான். காலம் கடந்து மீறிவிட்டது என்பதில்லை.

உலகத்தில் அவனைப் போன்ற ஜனநாயகக் கொள்கைக்காரன் இல்லை. நன்மையோ, தீமையோ எது வேண்டுமானாலும் செய் என்று நம் ஒவ்வொருவருக்கும் பூரண சுதந்திரம் தந்திருக்கின்றான். ஆயினும் அவனைப் போன்ற கொடுமைக்காரனும் இல்லை. கைக்கு எட்டினதை வாய்க்கு எட்டாமல் செய்து விடுகிறான். ஆத்ம சுதந்திரம் என்று கொடுத்ததாகக் காட்டித் தன் விளையாட்டைத் தான் காட்டுகிறான்.

நம்முடைய சாஸ்திரங்களில் அவனுடைய காரியங்களை அவனுடைய விளையாட்டு என்று தான் சொல்வார்கள். லீலை என்றோ, மாயை என்றோ சொல்லப்படுவது இதுவே. நாம் இருப்பது என்பதே ஓர் இல்லாத விஷயம். இருப்பது அவன் ஒருவனே. கடவுள் ஒன்றே மெய்ப்பொருள், நாமும் இருக்க வேண்டும் என்று விரும்பினோமானால் அவனைத் துதித்துக் கொண்டிருக்க வேண்டும்; விடாமல் துதித்துக் கொண்டும்; விடாமல் அவன் அடிமைகளாக நடந்து கொள்ள வேண்டும். அவன் கருத்திற்கு நாம் கருவிகளாக வாழ வேண்டும். அவனுடைய வேணுகானத்திற்கு நாம் ஆடவேண்டும். அப்போது எல்லாமே நலனாக முடியும்.

தமிழாக்கம்: ராஜாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மாகியம்பதி சண்டிலிப்பாய்

(நயனி வீடியோ வீதி)

ஸ்ரீ ஞான வைரவர் ஆலய

**மணவாளக் கோல விஞ்ஞாபனம்**

ஞான வைரவ அடியார்களே!

மங்களகரமான வெகுதானிய வருடம்ஆனி மாதம் 7ஆம் திகதி இன்று (21-06-1998) ஞாயிற்றுக்கிழமை பரணி நட்சத்திர தினத்தன்று காலை 10-00 மணிக்கு

மூலமூர்த்தி ஸ்ரீ ஞான வைரவருக்கு

விசேஷ அபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும்.

ஆலய ஆதீனகர்த்தா

(57032) ந. சிறிதர சர்மா

## கலை வர்த்தகக் கல்லூரி (C.C.A)

பொருளியல் — திரு. சண்

A/L 99 -- தேசிய வருமானம்

பிரிவு i, ii 10. 00—11. 00 மணி, 1. 00—2. 00 மணி

A/L 2000 -- பொருளியல் அறிமுகம்

கேள்விக் கோட்பாடு

பிரிவு i, ii 11. 00—12. 00 மணி, 12. 00—1. 00 மணி

**ஆரம்பம்: 21 – 06 – 98 (சனி, ஞாயிறு)**

(57029)

யாழ். மாவட்ட

## வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம் அறிவித்தல்

**1998 - 06 - 20** சனிக்கிழமை நடைபெற்ற யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்ட 1998ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப் பினர்கள் பட்டியல்;

தலைவர்; திரு. வல்லிபுரம் செல்வராசா
(வர்த்தகர் சங்கம், புலோலி)

உப - தலைவர்: திரு. சி. எஸ். எஸ். முத்துக்குமாரு
(வர்த்தகர் சங்கம், சுன்னாகம்)

செயலாளர்: திரு. வே. திருநாவுக்கரசு
(வர்த்தகர் சங்கம், நல்லூர்)

உப – செயலாளர்: திரு. கே. இருஸ்ணானந்தமூர்த்தி
(வர்த்தகர் சங்கம், நல்லூர்)

பொருளாளர்: திரு. தி. சிவதாசன்
(வணிகர் கழகம், யாழ்ப்பாணம்)

**தலைவர் செயலாளர்**


யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்

இல. 19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். 20-06-98 (சி/4074)

## 31 ஆம் நாள் அந்தியேஷ்டி அழைப்பு

அன்புடையீர் !

கடந்த 23 – 05 – 1998 சனிக்கிழமை ஜேர்மனி நாட்டில் காலமாகிய எமது குடும்ப விளக்கு



அமரர்

**ஜெகராசா (சின்னராசா)**

எமக்காய் வாழ்ந்து எமை உயர வைத்தீர்! எம் புகழைக்காணாது நீர் எங்கு சென்றீர்? தந்தை என்று சொல்ல யாருமில்லா பாவியராய் தரணியிலே எமைத் தவிக்க விட்டுச் சென்றீரே! பாலொடு வெண்மை யாய்க் கலந்த உம் நினைவினைக் காலமெல்லாம் சுமந்து தவிக்கின்றோம்;

அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேஷ்டி வைபவம் எதிர்வரும் 22 — 06 — 1998 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது; அவ்வமயம் தங்களை அந்தியேஷ்டிக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம்அன்புடன் அழைக்கின்றோம்;

மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர், மருமக்கள்.

கனகசபை வீதி,
மானிப்பாய். (57036)

## இன்றைய ஆட்டம்

பாரிஸ், ஜூன் 21

பிரான்ஸில் நடைபெறும் 16 ஆவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட் டித் தொடரில் இன்றிரவு இலங்கை நேரப்படி மூன்று ஆட்டங்கள் இடம்பெறவுள் ளன.

★ இரவு 8.30 மணி — ஜேர்மனி எதிர் யூகோஸ்லா வியா.

★ இரவு 9.30 மணி —ஆர் ஜென்ரீனா எதிர் ஜமேக்கா.

★ இரவு 1 மணி — ஈரான் எதிர் அமெரிக்கா.

## கோழிக்குஞ்சு விநியோகம்

கால் நடை உற்பத்தி சுகா தாரத் திணைக்களத்தால் ஒருநாள் பேட்டுக் குஞ்சுகள் நாளை மறுதினம் 23 ஆம் திகதி விநியோகிக் கப்பட இருக்கின்றன.

தேவையானவர்கள் தங் கள் பகுதி கால் நடை வைத் திய காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு அன் றைய தினமே கோழிக் குஞ்சு களைப் பெற்றுக் கொள்ளு மாறு யாழ். கால் நடை உற் பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் அறி வித்துள்ளார். (இ-6)

## தடை விதிக்க கோரி ஆர்ப்பாட்டம்

'இன்டர்நஷனல் அலேர்ட்' (சர்வதேச விழிப்பு இயக்கம்) எனப்படும் அரச சார்பற்ற நிறுவனத்தின் செயற்பாட் டுக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட வேண்டுமெனக் கோரி கொழும்பு மனித உரி மைகள் பாதுகாப்பு அமைப் பைச் சேர்ந்தோர் நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப் பாட்டமொன்றை நடத்தி னர்.

கொழும்பு, பம்பலப்பிட்டி, கின்ரோஸ் அவனியூவிலுள்ள 'இன்டர்நஷனல் அலேர்ட்' அமைப்பின் பிரதிநிதி ஒரு வரின் அலுவலகம் முன்னால் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்திய கொழும்பு மனித உரிமை பாதுகாப்புச் சங்கத் தலைவரான பெரேரா 'இலங்கை இனப்பிரச்சினை யில் இலாப மீட்டும் நோக் குடன் 'இன்டர்நஷனல் அலேர்ட்' ஈடுபடுகின்றது— எனக் கூறினார்.

புலிகளுக்குச் சார்பாகவே இது செயற்படுகிறது. எனவே இலங்கை அரசு இதனைத் தடை செய்யவேண்டும் என் றும் அவர் கேட்டுக் கொண் டார். (இ-ரீ-5)

## ரஜினி வழக்கு மேல் நீதிமன்றுக்கு

கொழும்பு, ஜூன் 21

கோண்டாவிலில் இடம் பெற்ற ரஜினி வேலாயுத பிள்ளை பாலியல் வல்லுறவு கொலை வழக்கு பூர்வாங்க விசாரணை முடிவில் மேல் நீதி மன்றத்துக்குப் பாரப் படுத்தப்பட்டது.

இந்த வழக்கில் எதிரி களான நான்கு இராணுவத் தினரையும் மேல் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராக கொழும்பு பிரதம நீதிவான் ஏ. டி. சில்வா உத்தரவிட் டார்.

இந்த சம்பவத்தில் கோப் ரல் காமினி சமன் உயனகே, இராணுவ சிப்பாய்களான எஸ். அருணசாந்த், எச். சரத்சந்திர, டி. சித்சிறி ஆகி யோரே எதிரிகளாக குற்றம் சாட்டப்பட்டவர்களாவர்.

வழக்கு விசாரணையில் 22 பேர் அரச தரப்பில் சாட் சியமளித்தனர், ரஜினியின் ஆடைகள், நகைகள் உட்பட 22 பொருள்கள் தடயப் பொருள்களாக சமர்ப்பிக்கப் பட்டன. (இ-5)

## வெடிபொருள் அறிவிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 21

வீடுகள் மற்றும் பொது இடங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்கள் காணப்பட்டால் உடனடி யாக எமக்கு அறியத்தந்தால் அதனைச் செயலிழக்கச் செய்வோம்.

இவ்வாறு ஐ. நா. அபிவி ருத்தித்திட்ட வெடிபொருள் அகற்றும் நிபுணர் டேவிட் டெய்லர் தெரிவித்துள்ளார்.

வெடிபொருள்கள் எனச் சந்தேகம் ஏற்பட்டால் அவற்றை எடுப்பதற்கு எவ ரும் முயற்சிக்கக் கூடாது. எமக்குத் தகவல் தந்தால் ஆபத்து எதுவுமின்றி நாம் அவற்றைச் செயலிழக்கச் செய்வோம் என்றும் அவர் கூறினார். (இ-5-6)

## பாராட்டு

தென்மராட்சி, ஜூன் 21

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் அண்மையில் வெளியாகிய ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகளின் படி சிறந்த பெறுபேறு களைப் பெற்ற மாணவர் களால் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப் பட்ட வைபவம் கடந்த வாரம் வித்தியாலய மண்ட பத்தில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் மாண வர்கள், பெற்றோர்கள், ஆசி ரியர்களையும், அதிபரையும் பாராட்டி உரையாற்றினர். (ஐ-117)

## நவாலியில் வேள்வி

சுதுமலை, ஜூன் 21

நவாலி தம்பனை மாரியம் மன் ஆலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வேள்வி யில் 50க்கு மேற்பட்ட கடாக் களும், சேவல்களும் பலி யிடப்பட்டன எனத் தெரிய வருகிறது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் இந்த வேள்வியில் கலந்து கொண்டதாகவும்— கடாக்களும், சேவல்களும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரியவந்தது. (இ-7-139)

## தென்மராட்சி உயர்கல்வி நிலையம்

சாவகச்சேரி.

( பழைய சிவாகி, சிவன் கோவில் வீதி, சாவகச்சேரி )

★ யாழ்ப்பாண. பேராதனைப் பல்கலைக்கழக GAQ, BA I, BA II, BA வகுப்புகள்

★ 1999, 2000 ஆண்டுகளுக்கான க. பொ. த. (உயர் தர) கலை, வாத்தக வகுப்புக்கள்
தற்பொழுது நடைபெறுகின்றன.

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக - GAQ புதிய பிரிவு 22-6-98 பி.ப. 3-30 மணிக்கும்

★ வர்த்தக முதற்தேர்வு - புதிய பிரிவு 27 - 06 - 98 மு. ப. 9-00 மணிக்கும்

ஆரம்பமாகவுள்ளன. அனுமதிக்கு முந்துங்கள்.

( தற்பொழுது தென்மராட்சியில் பட்டப் படிப்புக் களை நடத்தும் தனித்துவமான ஒரே நிறுவனம் இது வாகும். )

– நிர்வாகி

(57030)

அடுத்த வாரத்தில் — 3 நாட்கள் ஜூன் 26, 27, 28

**திருமறைக் கலாமன்றம்** நடத்தும்

# ★ தமிழ் விழா - 1998 ★

### காலையில் - கருத்தரங்கு

**நாவலர் கலாசார மண்டபம்**

சனி, ஞாயிறு தினங்களில்
காலை 9-00மணி— 1-00 மணி வரை

27-06-98 'நாடக அரங்கு'

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில்

★ பா. அகிலன் ★ என். நவதர்ஷினி
★ திரு. க. ரதீதரன் ★ இ. ஜெயரஞ்சினி
★ யோ. யோன்சன் ராஜ்குமார்

28-06-98 'இலக்கிய அரங்கு'

கலாநிதி க. குணராஜா (செங்கை ஆழியான்) தலைமையில்

★ கலாநிதி நா. சுப்பிரமணியன்
★ திருமதி கோகிலா மகேந்திரன்
★ மாதவி சுந்தரம்பிள்ளை
★ இ. திலகரட்ணம்

அனைவரும் வருக!

### மாலையில் கலை நிகழ்ச்சி

**கலாமன்ற அரங்கு**

தினமும்
மாலை 5. 30 — 3. 30

★ கவிதைக் கதம்பம்
★ இசையும் கதையும்
★ இசைக் கச்சேரி
★ நாடகம்
★ நாட்டுக் கூத்து
★ நடனம்

சிறப்புரைகள்:

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை
கலாநிதி எஸ். சிவலிங்கராஜா
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

தமிழின்பம் பெறுக!!

(சி/4076)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LION AIR விமான சேவை

எமது ரிக்கட் பதிவுநிலையங்கள் வடமராட்சி, தென்மராட்சியிலும் இயங்குகின்றன என்பதை அறியத் தருகின்றோம்.

வடமராட்சியில்

LION AIR ரிக்கட் காரியாலயம்
NO. 16 மெயின் வீதி,
பருத்தித்துறை.

மேலதிக விவரங்களுக்கு:

ராஜன் வீடியோ, பருத்தித்துறை.
செல்லமுத்து புடைவை நிலையம்,
மெயின் வீதி, நெல்லியடி.

தென்மராட்சியில்

நவீன சந்தை, சாவகச்சேரி.

மேலதிக விவரங்களுக்கு:

வாணி ரெக்ஸ்,
நவீன சந்தை, சாவகச்சேரி,

**MARKANDU STORES**
LionAir Ticketing & Cargo
37, Kasthuriar Road, Jaffna.
T. P- 2028

(சி/4077)



புதிதாக யாழ். நகரில்!

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்

சகலவிதமான பலசரக்கு வகைகளும், சிமெந்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

★ 19-06-98 இல் இருந்து 30-06-98 வரை மோட்டார் சைக்கிள்களுக்கு விசேட கழிவு உண்டு.

HONDA MD- 90, HONDA MD- 50
„ CD- 50, „ CD- 90
SUPER CUP LANCER- 50
CHALLY- 50
YAMAHA - 50 YAMAHA- 90

இரும்புப்பெட்டி விற்பனைக்கு வைத்திருப்போர் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: இல. 171, KK.S. வீதி,
யாழ்ப்பாணம்.

(56941)


## ...று தமிழ்க்கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

மக்கள் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்தும்—புளொட் அமைப்பினர் நடத்தத் தீர்மானித்துள்ள இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்குத் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய தமிழ்க்கட்சிகளும், வர்த்தகசங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், காணாமல்போனோர்சங்கம், வாடகைக் கார் உரிமையாளர் சங்கம், ஓட்டோ சாரதிகள் சங்கம் போன்றனவும் ஆதரவு வழங்கமுன்வந்துள்ளதாக புளொட் அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா தெரிவித்தார்.

நேற்றுமாலை 3.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே கட்சிகளும் சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

உண்ணாவிரதப் போராட்டத்தைப் பெருமெடுப்பில் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதற்காக புளொட் சார்பில் கிருபைராஜா, கூட்டணி சார்பில் மாநகரசபை உறுப்பினர் கந்தையன், ரெலோ சார்பில் றொபேட், ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் மாநகரசபை உறுப்பினர் சுபத்திரன், வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் சுந்தரமூர்த்தி, காணாமல் போனோர் சங்கத்தின் சார்பில் செல்வராஜா ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

(இ-9-21)

## இரத்தினபுரியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கான மின்சார விநியோகமும் பல மணி நேரம் தடைப்பட்டது.

இக் குண்டு வெடிப்பினால் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 15 லட்சம் நஷ்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து இரத்தினபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஏனைய மின் மாற்றிகளை பாதுகாப்பதற்கு சாம் விசேட நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக இரத்தினபுரிப் பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-7)

## ரெலிகொம்..

(முதலாம் பக்கத் தொடர்)

பெற்றது.

இத் தாக்குதல் காரணமாக கோபுரம் வளைந்து சரிந்து விட்டது.

தொலைபேசி பரிவர்த்தனைப் பிரிவுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை.

கோபுரம் வளைந்து சரிந்து விட்டதால் இப்பிரதேசத்தில் உள்ள 500 தொலை பேசிகள் செயலிழந்துள்ளன.

(இ-21)


PHONE TODAY
**YOGA COMMUNICATION**
DAY & NIGHT SERVICE

21 - 06 - 1998 ஞாயிறு இன்று
315, பலாலி வீதி, வளாகச் சந்தி,
பிள்ளையார்கோயில் முன்னால் திறந்து வைக்கப்படும்

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளும், குடா நாட்டுக்கு வெளியே இருந்து வரும் உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புகளும், செய்திகளும் உடனுக்குடன் உங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

FAX வசதிகளும் உண்டு,
இரவு பகல் சேவை.
தொலைபேசி இல: 2106

பா. லோகநாதன்.
நிர்வாகி,

(57022)


## குண்டு வைத்து தகர்ப்பு!

மட்டக்களப்பு, ஜூன் 21

அக்கரைப்பற்று, ஒலுவில் ரெலிகொம் பரிவர்த்தனை நிலையம் நேற்று முன்தினம் அதிகாலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

பரிவர்த்தனை நிலையத்தின் குளிரூட்டி அறை இயந்திரப் பிரிவு என்பன முற்றாக சேதமடைந்தன. (இ-7-21)

## புயலால் இறந்தோர் அதிகரிப்பு

புதுடில்லி. ஜூன், 21

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் அண்மையில் வீசிய கடும் புயலினால் இறந்தோரின் எண்ணிக்கை ஆயிரத்து நூற்று 31 ஆக உயர்ந்துள்ளது. புயலினால் காணாமற் போனோரின் எண்ணிக்கை ஆயிரத்து எழுநூற்று 54 ஆக உயர்ந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

புயலினால் அதிகளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஹெலிகள் மூலம் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், புயலினால் தாக்கி சேதமாக்கப்பட்ட கண்டலா துறைமுகத்தை புனரமைப்பது பற்றி ஆராய்வதற்காக அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாகும்வரை. .

(முதலாம் பக்கத் தொடர்

மின்றி எம்மைத் தடுத்து வைத்துள்ளார்கள், நாம் பல முறை உண்ணாவிரத முயற்சிகளில் இறங்கிய போது ஒவ்வொருவர் தலையிட்டு எமது போராட்டத்தைத் தொடர முடியாமல் செய்தனர். ஆனால் அவர்களால் எமக்கு எந்தவிதமான நன்மையையும் செய்யமுடியவில்லை.

எனவேதான் நாம் இப்போது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளோம். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நாம் இடையில் கைவிடுவதாக இல்லை.

நாம் முன்வைத்துள்ள கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தால் மட்டுமே நாம் எமது போராட்டத்தைக் கைவிடுவோம். அல்லது எமது போராட்டம் தொடரும்.''

இவ்வாறு அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-9-1)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

ணிகளையும் யாழ். அழைத்துச் செல்வதற்கு ''லங்கா முடித'' கப்பல் பயன்படுத்தப்படுமென இம் மாதம் 8 ஆம் திகதி அளவில் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அப்போது காங்கேசன்துறையில் பொருள்கள் இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இந்தக் கப்பல் பயணிகள் சேவையை நடத்தாமலேயே இம் மாதம் 9 ஆம் திகதி கொழும்பு திரும்பி இருந்தது.

'லங்கா முடித' கப்பல் சேவை இடம் பெற்றால் தாம் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்படுவோம் என எதிர்பார்த்த பயணிகளே இன்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொள்கின்றனர்.

இதே வேளை பயணிகள் கப்பல் சேவை குறித்து கருத்து வெளியிட்ட திருமலை பிரதேச செயலர் (பட்டணமும் சூழலும்) இம்மாத இறுதி வரை கப்பல் சேவைகள் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் எதுவுமில்லை என்றும் —

கொரியாவிற்கு கப்பலைப் பார்வையிடச் சென்ற குழுவினர் நாடு திரும்பியதும் கப்பல் சேவை குறித்து முடிவு எடுக்கப்படுமெனவும் — நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார். (இ-7-9-1)








வட்டுக்கோட்டை தெக்கணப்பாய்
கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர சுவாமி
தேவஸ்தான
# மகா கும்பாபிஷேகம்

காலம்: நாளை 22 – 06 1998 திங்கட்கிழமை
நேரம்: பகல் 11-50 மணி தொடக்கம் 1-30 மணி வரை
எண்ணெய்க்காப்பு சாத்துதல் 21-06-98 காலை 8-00 மணி முதல் மாலை 4.00 மணிவரை

ஷெ ஆலய பரிபாலன சபையும் தொண்டர் சபையும்

விளம்பர உதவி: **வலம்புரி அழகுமாடம்**
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

(56991)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-6-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org